பாரேநீயுகந்தோறும் சொல்லக்கேளு பண்பான மேருவுக்கு வடபாகத்தில்:திரேநீமனிதரப்பா தங்கவண்ணம் திகழ்மதியாமூயா

மப்பா சொல்லக்கேளு, வாரேநீநாலாயிர முழமேயாகும் வளமான ஆலங்கனியுந்நீரோடே, சீரேநீஅருந்துறது அதுதானப்பா சிறப்பானசதாசிவமேதெய்வந்தானே ... ... (௱௪௬)

தானாகும்வயததுதான் நாலிலட்சம் தாயாகசத்தியத்தைக் கைவிடாதார், கோனானபொய்யொன்றுஞ் சொல்லிடாதார் குவலயங்கள்கலையல்லால் வேறொன்றில்லை, சேனானமேருவுக்குவடபாகத்தில்செயலான மனிதருடசெய்கையப்பா,தேனானபோகருடகடாக்ஷத்தாலே தெளிவாகப்புலிப்பாணி விளம்பினேனே... (௱௪௭)

விளம்புறேன் மேருவுக்குக் கிழக்கேயப்பா விதமானமனிதர்கள்தாம் நீலவண்ணம், தளம்புறே னுயரமது நானூறாகும் தயவாகநவகனியுமந்நீரோடே, கிளம்புறேன் அருந்துறது இதுதானப்பா கிருபையுள்ள விஷ்ணுவுமே தெய்வமாகும், நளம்புறேன் வயததுதானிரண்டிலட்சம்நலமில்லா அசத்தியங்களில்லைத்தானே (௱௪௮)

இல்லானமேருவுக்குமேற்கே அப்பா இருப்பார்கள் மனிதரப்பாரந்தவண்ணம், வல்லான வுயரமது நாற்பதாகும்வகையானமாங்கனியுமந்நீரோடே, எல்லாருமருந்துறது இதுதான்பாரு இதமானபராசத்தி தெய்வமாகும்,சல்லானவயததுதான் லட்சமாகும் சார்வானசத்தியமும் பொய்யில்லாரே ... ... (௱௪௯)

பொய்யில்லைமேருவுக்குத்தெற்கே ஐயா பொங்கமுடன் மனிதருடநிறத்தைக்கேளு,மையில்லா நிறமதுதான் அந்தவண்ணமந்தனையுயரமது முழந்தானுவு, செய்யில்லா அறுசுவையுமநேகவர்க்கஞ் செயலானஅன்னமொடு சருக்கைநீரும்,எய்யானபாலோடுகிழங்குகாய்கள் இதமான அமிர்தமதுகொள்வாருண்டே ...(௱௫௰)

உண்டான அநேகவிததெய்வமுண்டு உத்தமனே சாஸ்திரங்களநேகமுண்டு, பண்டானபொய்கொலையுங் களவுமுண்டு பண்பில்லாவிசுவாசம் பாவமுண்டு, செண்டான முறைமைகெட்டு மையல்கொண்டு செயலானபாக்கியமும் வறுமையுண்டு, கொண்டானவயததுதானூறென்பார்கள் கொற்றவனே நிச்சயந்தானில்லைத்தானே ()

தானென்ற கோயில்குளம் ஆறுமுண்டு தடமானபுண்ணியமும்பாவமுண்டு, மானென்றசித்தரொன்றும் முனிவரொன்றும் மகிமையாந்தபோதனர்கள்பெரியோரொன்றும்,கோனென்றவரசரென்றுங்குருக்களென்றும் கொடிதானபிர்மலபி- கடந்தோரொன்றும், வானென்றகிரகங்கள் நோய்களென்றும்வகைவகையாய்ப்பலசாதியனேகத்தானே ... ... (௱௫௨)

தானனபோகருட கடாக்ஷத்தாலே தயவாகப்புலிப்பாணிவிள க்கஞ்செய்தேன், வீணாக அவரவர்கள் செய்தகர்மம் விளைந்த தடா நோய்ப்போல அனேகங்கோடி, கோணாகவந்தகர்மந்தீரவேண்டிக்கு ணமாகத்தானதர்மஞ்செய்யவேண்டும், தேனாகதருமங்கள்செய்யா விட்டால் தேகமதுநோயுற்றபாண்டமாமே ... (௩௫௩)

மருந்தீடுமுறிய.

ஆமேநீமருந்தீடுமுறியவேண்டில் அப்பனே இலவினுட பட் டைக்கொண்டு, தாமேநீயெலுமிச்சங்காயின்சோடு தயவாகஅரைத் தூக்காடியிற்கலக்கி, வாமேநீதுட்டெடைசர்க்கரையுங்கூட்டி வளமா கக்கொடுத்தவுடன்மயக்கந்தீரும், போமேநீபெண்மயக்கம் ஆண்ம யக்கம்போச்சேதிமூன்றுநாள்கொடுத்தப்போதே ... (௩௫௪)

சூலைக்கு.

போதேநீசங்கம்வேரிழைத்தரைத்துப் பொங்கமுடன்புல்லை க்காய்ச்சிதமாக, சூதேநீயில்லையடாகாடியிற்கொள்சுருக்கானமண்ட லத்திலவியாதியெல்லாம், ஊதேநீயோடிவிடும் நாடுவிட்டு உத்தம வைத்தியந்தா னில்லையப்பா, சாதேநீவெள்ளாட்ட மூரிதன்னிற் கொள்ள சார்வாகசூலையதுதீருந்தானே ... ... (௩௫௫)

கர்ப்பமுண்டாக-எண்ணெய்.

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு தயவானவீழியிலை ச்சாறுநாழி, மானேதான்தைவேளைச்சாறுநாழி மைந்தனேபிரமியி லைச்சாறுநாழி, கோனேதான்* கொட்டையிலைச்சாறுநாழி கொடி தானநிலவாகைச்சாறுநாழி, தேனேதானாவின்பால் படிதானாழிதெ ளிவாகச்சாரக்குவகைசொல்லக்கேளே ... ... (௩௫௬)

*கொட்டையிலைகொட்டைக்கரந்தை

கேளேநீமஞ்சளுடன்கடுகுகூடக் கெணித மூடனிந்துப்புவெ ண்காரந்தான், நாளேநீகடுக்காயும் வெள்ளைப்பூண்டு நலமானஆண்வ சம்புசுக்குங்கூட, பாளேநீவகைவகைக்குவிராகன் மூன்றுபண்பாகப் பொடிசெய்துஇதனிற்போட்டு, கோளேநீவிளக்கெண்ணெய் நாழி விட்டுக்கொடிதாகமெழுகுபதந்தன்னில்வாங்கே ... (௩௫௭)

வாங்கியேகணபதிக்கு முன்னேவைத்து வகையாகசோடசங்க ள்செய்தபின்பு, பாங்குடனேமாதவிடை மூன்றும்நாள்தான் பண் பாகதலைமுழுகிக்கரண்டியெண்ணெய், தாங்கியேகொடுத்துவிடு நா ன்மூன்றப்பா தயவாகமறுபத்தியமொருநாட்காரு, தூங்கியேதிரியா மே ஐந்தாநாளில்துருசாகசிரசுக்குநீவாரோ... ... (௩௫௮)

வாரோதிவருத்தவுப்புபொரிச்சாறப்பா வளமாகமற்றுநாளெல்லாஞ்சேரு, தீரோநீமற்றுநாள்நசியமொன்று தீர்க்கமாம்வேலியிலைவேளாத்தட்டி; கூறோநீவலதுநாசியிற்பிழிந்தால் கொற்றவனேஆண்பிள்ளைப்பிறக்கும்பாரு, சீரோநீயிடதுநாசியிர்பிழிந்தால்சிறப்பானப்பெண்ணென்றுஞ்செப்பினேமே .... (௱௫௯)

துவளை.

செப்பினேந்துவளையொன்று சொல்லக்கேளு சிறப்பானமாவிலைமாதளையுஞ்சேர்த்து,தப்பினேங்கஸ்த்தூரிமஞ்சளோடு தாயகமாயிவைமூன்றுஞ் சமனாய்ச்சேர்த்து, அப்பினேஞ்சலம்விட்டு அரைத்துமைபோல் அடவாக மேனியெங்கும் பூசச்சொல்லு,வெப்பினே மேனேருக்கியுதிர்த்துப்போடு விதமாகவுதிர்ந்ததைதான்சேரவாரே .... (௱௬௰)

புகை.

வாரினதைமாவிலையின் தன்னில்வைத்து வகையாகமுகங்காட்டித்தலையைச்சுற்றி, கோரினேனடுவாசல்குழியைத்தோண்டி குணமாகத்தான்புதைத்துச்சொல்லக்கேளு, ஆரினேன்சலமதுதான் சிரசில்வார்த்து அப்பனேபுகையொன்று சொல்வேன்பாரு, தூரினேன்சாம்பிராணி அகிலின்கட்டைத் தூளிடித்துப்புகைகாட்டு நாள்தான்மூன்றே.. (௱௬௧)

மூன்றுநாள் துவளையிட்டுப் புகையும்போட்டு மூர்க்கமுள்ள சிதம்பரத்தைமாறிக்கட்டு, ஈன்றுபோல்மூன்றுதிங்க ளிந்நபாகம் இதமானமாதவிடாயாகும்பக்குவம், கூன்றபோ லிம்முறையைச் செய்யும்போது குணமாககர்ப்பமதுதரிக்கும்பாரு, ஊன்றுபோல்போகருடகடாக்ஷத்தாலே உத்தமனேபுலிப்பாணிபாடினேனே( )

சிவகிரிவளப்பம்.

பாடினேன்சிவகிரியின் மாற்றேதென்னில பண்பாகஆயிரத்தெட்டுமாற்று,சூடினேனவலோக மிதிலேயுண்டு சுருக்கப்பாசாஸ்திரமும்வேதையோடும், வாடியேதிரியாதே நரையும்மாறும் வயதப்பாலக்கிலலைகெவுனியாவாய், நாடியேசுன்னமொடுசிந்தூரக்காடு நாயகனேஅஷ்டசித்திநடனந்தானே .... (௱௬௩)

தானென்றநவசித்தர் கோடாகோடி தாநடநமதிகமடாசித்தர் கூட்டங், கோனென்றமலையுள்ளே விருக்ஷமூலி குற்றமில்லை வேதையுந்தானநேகஞ்செய்வார்,வானென்றதேவரொடு முனிவர்சித்தர் வருகிறதும்போகிறதுங்காணச்செய்யும்,மானென்றதேவரொடு தவமேசெய்தோர் மைந்தனேசித்திமுத்திபெறுவர்தானே ... (௱௬௪)

வராககிரி.

தானென்றவராககிரிச் சருவில்மைந்தா தயவானவோடைகளு
ம்ஆறுதோறும், தேனென்றஅருவியுடமண்ணுங்கல்லும் தெரியாம
ல்தங்கமா யிருக்குமப்பா, பானென்றமூலிகையால் வேதையாகும்
பட்டமண்ணுங்கல்முதலாய்த்தங்கமாகும், கோனென்றசிலைபோலே
கிடக்கும்பாரு கொற்றவனேயறியார்களாருந்தானே...... (௱௬௫)

சதுரகிரி.

தானானசதுரகிரிமேலேயப்பா தயவான*உதகமொன்று இரு
க்குதப்பா, மானானக்*காஞ்சனமாங்காயசித்தி மைந்தனே இஷ்ட
சித்திகெவுனசித்தி, கோனானதேவர்முதல்கணங்கள்யாவுங் கூப்பிட்
டால்கேள்விவந்து கேட்கும்பாரு, வானானசித்தருட கூட்டமெத்த
வளமானசஞ்சீவிமூலியுண்டே...... ....(௱௬௬)

உதகம்-சலம்*காஞ்சனம்-பொன்-

உண்டானமூலியைத்தான் குகையினுள்ளே ஒளித்துவைத்தா
ர்சித்தரெல்லாம் வெளியாமென்று, பண்டானசித்தருக்கு மூலிகிட்
டும்பாவிகட்குங்காமிகட்குங்கிட்டுமோசொல், சென்டானபூவுலகில்
மனிதரெல்லாஞ் செத்தவர்களெழுந்திருப்பார் சிடங்கொள்ளாது,
கொண்டானவிதியாளிவந்தானாகில் கூப்பிட்டுதான்கொடுப்பார் சித்
தர்தானே ... ...(௱௬௭)

இருமலுக்கிலேகியம்.

தானானவிலேகியந்தான்சொல்லக்கேளுதருவான *கரிப்பான்
சாற்படிதானென்றுபாலானகாணிச்சாற் நாழியொன்றுபண்பாகச
ங்கம்பழச்சாறுநாழி, வானானதேன்படிதா னாயுங்கூட்டி வளமா
னஆவினெய்ப்படிக்கால்சேர்த்து, கோனானதிப்பிலியுமிளகுசுக்குக்
கொடிதானசிற்றரத்தைகடுக்காய்த்தானே ... .(௱௬௮)

*கரிப்பான்சாறு-கையாந்தகரை

தானப்பாவகைக்குவகைவிராகனெடைதான்பொரித்துவடிகட்
டிலேகியமாய்க்கிண்டுவானபபாநெல்லிக்காயளவாய்க்கொள்ளவளமா
கஈராறுநாளுக்குள்ளே, கோனப்பா அந்திசந்தி கொண்டபோது
கொடிதானஇருமலெல்லாங்குடியேபோகும், நானப்பாபத்தியந்தா
னில்லையையா நாயகனேயிலேகியந்தான்மேருவென்னே.. (௱௬௯)

சூலைவாயுமேகத்துக்குத்தயிலம்.

என்னவேதயிலமொன்று சொல்லக்கேளு இதமானகொடிவே
லிமூலிதானும், பன்னவேநூலாமணாதானிடித்துப் போட்டுபண்பா

ண ஆவின்பட்டை சங்கம்வேரும், நன்னவேவகைக்குவகை திலாமே
கால்தான் நாயகனேஇத்துடனே கூடச்சேர்த்து, அன்னவேதுணி
நீர் விட்டுக்காய்ச்சு அப்பனேயெட்டொன்றாய்க் குறுக்கிவாங்கே ()

வாங்கியேஎள்ளெண்ணெய்நாழிவாரு வகையானமிளகுபலமு
ரைத்துப்போடு, தாங்கியேபசுவின்வெண்ணெய்பலந்தானொன்று
தயவாகவேப்பெண்ணெய்ப்படிகால்வாரு, பாங்கியேமெழுகுபதந்
தனில்வடித்து பண்பாகமுழுகிவரசூலையேகுந், தூங்கியேதிரியாதே
மேகமெல்லாந்துடித்துவிழுந்தேயோடுமெதிர்நில்லாதே...(௱௭௨)

பிரமேகத்துக்குஎண்ணெய்.

நில்லாதபிரமேகந்தீரவேண்டில் நிச்சயமாய்த்தேங்காய்ப்பா
ல்படிதானொன்று, வல்லானபொடுதலைச்சாற்படிதானொன்றுவளமா
னபிரமிச்சாற்படிதானொன்று, நல்லாகளரித்திறத்துஎண்ணெய்வா
ங்கி நாயகனேமூன்றுநாளாறுவேலை செல்லாகக்குடித்தவுடன்பிர
மியங்கள்சிறப்பாகத்திருமடாதிண்ணந்தானே......... ...(௧௨௨)

திண்ணமாய்ப்பத்தியந்தானாறுநாளுஞ் சிறப்பானஆவின்பா
லாகுமல்லால, வண்ணமாய்மற்றொன்று மாகாதப்பா வளமாக ஏழா
நாள்தலைமுழுக்கு, உண்ணமாஞ்சீய்ப்பிரமியம் ரத்தப்பிரமியம் உ
த்தமனேதீருமடா இந்தஎண்ணெய், எண்ணமொன்றுமில்லையடா
விசனம்போகும் என்னசொல்வேனெண்ணெயுடவீரந்தானே - ()

சுகபேதிசூரணம்.

வீரந்தான்பேதியொன்றுசொல்லக்கேளு விதமானசீவேதை
வேர்பசுவின்பாலில், சீரந்தான்மிதக்கவிட்டுச்சுண்டக்காய்ச்சிதிற
மாகஉலர்த்தியதைதூளாய்ப்பண்ணி, வாரந்தான்சரியெடைசர்க்க
ரையுஞ்சேர்த்து வளமாகவலமதுஅரைக்கால்சேர்த்து, பாரந்தான்
வெருகடிதான்வெந்நீரிற்கொள் * பள்ளநற்சீதமுதற்கழிந்துபோ
மே ... ... (௧௭௬)

*பள்ளநற்-திசைச்சொல் குறிப்பு

விற்புருதிக்குமருந்து.

போமேநீவிற்புருதிவந்தபேர்க்குப்பொங்கமுடன் *சல்லிவே
ர்க்கிழங்குவாங்கி, தாமேநீகழுவியதைதோலைப்போக்கி தயவாகநா
லுபலமொருவேளைக்கு, வாமேநீகம்புமாவரைப்படியும்போட்டுவள
மாகக்களிகிண்டி அந்திசந்தி, ஆமேநீபசுவின்நெய்க்கருப்புக்கட்டி
அடவாகமூன்றுநாள்கொண்டிடாயே.................. ...(௧௭௫)

*சல்லிவேர்-தண்ணீர்விட்டான்-

கொண்டபின்புமறுபத்திய மூன்றுநாளும் குணமாகவெந்நீ ரும்அன்னமாகுக், கண்டபின்புஏழுநாள்சலத்தைவாரு கருவானவி ற்புருதிக்கரைந் துபோச்சு, அண்டபின்புசின்னிபொடுதலையின்சாறு அப்பனேபத்தியந்தானிந்தபாகம், உண்டிடவேஅளையாப்புவிற்புரு திதீரும்உத்தமனேமேகசலக்கட்டிபோமே............... (௩௱௭௮)

மருந்திட்டுக்குமுறிவுசத்தியாக.

போமேநீமருந்திடுவாந்தியாகப் பொங்கமுடன்கரிப்பான்சா ற்தன்னைவாங்கி, தாமேநீயிருப்புடையப்படியிலப்பாதாழ் வரகக்கா ற்படிச்சாற்படியில்தானும், வாமேநீஎலுமிச்சம் பழச்சார்நேரோவ ளமாஅந்திசந்திப்படியில்விட்டு, ஆமேநீபுதையாதி ; துடங்குமுன் னேஅப்பனேஉள்ளுக்குக்கொடுத்திடாயே...... ... ...(௩௱௭௭)

கொடுத்திடவேவாந்தியதுகாணும்பாரு கொடிதானமருந்திடு எல்லாம்வீழும், அடுதிடவேவாந்திபது அதிகங்கண்டால் அடவாகு ப்புச்சரிசிபருப்பிடுனோடு, கடுத்திடவேகஞ்சியது கொண்டபோது ளங்கமறவாந்தியதுநிற்கும்பாரு, கொடுத்திடப்பாமருந்திடுதீர்ந்து ப்போச்சுகோசமதுவிலகிற்றுதொழிலைப்பாரோ.. ....(௩௱௭௮)

சாதிலிங்கக்கட்டு.

பாரேநீ*லிங்கமதுவிராகன்பத்துபாங்கானமுலைப்பாலிலொ ருநாள்போட்டு, சீரோநீவிராகனெடைதங்கரேக்கு சிறப்பானலிங்க த்தின் மேலேசுற்றி, தேரேநிவெண்காரம் பொரித்துப்பூசிசிறப்பா கசேக்கொட்டைபடிநறுக்கிப்போடு, வீரேநியிடித்தப்பா தேங்கா ய்*மட்டம்விதமாகலிங்கத்தைப்பொதிந்துமூடே...... ...(௩௱௭௯)

*மட்டம்-அளவு லிங்கம்-ஜாதிலிங்கம்

மூடியேசிறுசட்டிநடுவில்வைத்து மூர்க்கமுள்ளபசுவெண் ணெய்த்தேங்காய்வீதம், நாடியேசேள்கொட்டையுருண்டைமேலே நலமாகவைத்தெரிக்ககனல்தான்மீறி, ஆடியேதியெரிந்துசாம்பலா கும்அப்பனேஆறவிட்டுஎடுத்துப்பாரு, கூடியேலிங்கமதுவுருகிக்க ட்டி கொற்றவனே*உருக்கதுபோலிருக்கும்பாரோ ... ... (௩௱௮௰)

உருக்கு-எஃகு-

சூலை-ம் அறு, கியாழம்.

பாரடாசிவன்வேம்பு சங்கம்வேரு பாங்காகமுக்கழஞ்சுசித்திர மூலந், கூரடாவெள்ளறுகு * அசுவகெந்திகொடிதானசங்கங்குப்பி மூலத்தோடு, வீரடாபிரம்பினுடகிழங்குக்கூடவிதமானபூவரசன்பட்

டையோடு,சேரடா*நஞ்சுண்ட பட்டையப்பா சிறப்பாகவகைக்கு வகைபலந்தான்ரண்டே ... ... (௱௮௧)

*அசுவகந்தி-அமுக்கரா.

*நஞ்சுண்டப்பட்டை-நச்சுபாலைப்பட்டை.

இரண்டானவாய்விளங்க மிளகுசுக்குஇரதமிலாகாட்டுச்சீரகமு மப்பா, பண்டானவகைக்குபலம் ரண்டதாக*பசுமூலிசாக்கையுஞ் சேர்த்திடித்தெடுத்து, மூண்டாறுபங்காக்கி யொருபங்கப்பாமுக்கி யமாய்க்கிபாழம்வைத்துபறங்கிப்பட்டைபண்டாகக்கால்பலந்தான் முடிந்துபோட்டு படிசலந்தான்விட்டெரித் தெட்டொன்றாய் வாங் கே ... ... (௱௮௨)

*பசுமூலி-பச்சைமூலி

வாங்கியேபறங்கி புடப்பட்டை தன்னை வளமாகக்கியாழத்தில ரைத்துமைப்போல், தூங்கியேதிரியாமல்கலக்கிப்போடு துடிகொண் டகட்டுலிங்கம் பணவிடையிலப்பா, தாங்கியேயுரைத்து விடு இந்த பாகந்தயவாகஈராறுவேளைக்கொள்ள,பாங்கியேசூலை பதினெட்டுந் தீரும்பாங்காகப்பத்தியந்தானென்றுகாதே ... (௱௮௩)

ஒன்றானவெந்நீரும்அன்னங்கொள்ளுஒகோகோமறுபத்தியம றுநாட்காரு, நன்றாகஇப்படியேகாத்தாயானால் நாயகனேநோயே துசூலையேது, சென்றானவியாதியது அணுகுமோசொல் செம்மை யாய்ச்சடலமங்கேவலுத்துப்போகுங், கன்றானபோகருடகடாக்ஷத் தாலேகருவாகபுலிப்பாணிபாடினேனே ... (௱௮௪)

செங்கிரந்திதடிப்புக்கு,

பாடினேன் கொடிக்கள்ளி பயறுபோலேபாங்காவொருதுலா ம்பாண்டத்திட்டு,நாடினேன்ஒநருக்கத்தில்சலத்தைவிட்டுநாயகனே எட்டொன்றாய்க்குறுக்காய்ச்சி, கூடினேன்வடி கட்டுந்தாரந்தானே மூகொற்றவனேபடியரைக்காலந்திசந்தி, நாடினேன்திரியாதேகொ ண்டாயானால்நலமாகச்செங்கிரந்திதடிப்புப்போமே (௱௮௫)

போமேநீமூன்றுநாளாறுவேளைபொங்கமுடன்மறுபத்தியமூ ன்றுநாளாம்,நாமேநீபாறு நாளீராறுவேளை நாயகனே உப்பில்லாக்க ஞ்சியாகும்,ஆமேநீஏழ நாள்பத்தியத்தைத்தீரு அடவாகவிளக்கெ ண்ணெய்முழுகிவாநீ, தேமேநீகிரந்திவகையெல்லாந்தீருந் திறமா கபோகருடகடாக்ஷந்தானே ... ... (௱௮௬)

தானென்ற*ஒடுக்காணைப்பிடித்துவந்து தயவாகசெஞ்சிலேமே லேசுற்றி, வானென்ற சலாகையிலேகுத்திக் கொண்டு வளமாகவேப் பெண்ணெய்மேலேவாரு,கோனென்றதிபிடித்துவேகவேககொற்ற

வனேசுடரெண்ணெய்மேலேவாரு,பானென்றஎண்ணெயைநீயேழு
தரய்சேர்ந்தால் பண்பானஎண்ணெயதுதயிலமாச்சே ... (௩௮௭)
*ஒடுக்கான்-ஆமை

ஆச்சேநீதயிலமதுதட் டெடைதான்வீதம் அப்பனேஉள்ளு
க்குக்கொடுத்தபோது, வாச்சேநீமந்தாரசன்னியேது வகையாகமூ
ன்றுநாளாறுவேளை, வீச்சேநீயாறுநாள் பத்தியமாய்க்காரு வித்தக
னேஉப்பில்லாக்கஞ்சியாகும், பாச்சேநீமூன் தயிலந்துவளைப்போடு
பண்பாகஎழாநாள்நீரைவாரே ... ... (௩௮௮)

காதடைப்புக்குத்தயிலம்,

வாரேநீயின்னமொன்றுசொல்லக்கேளு வளமாகதுலாமிளகா
ய்நிறுத்துப்போடு,சேரேநீதூணிநீரொட்டொன்றுக்கிசெப்பமுடன்
மண்சட்டிதனிலிறுத்து,காரேநீஎள்ளெண்ணெய்நாழிவிட்டுக்கனிவா
கமிளகுபலமனாத்துப்போடு,தீரேநீமெழுகுபதந்தனில்வடித்து தீர்
கமாய்முழுகிவரப் பலனைக்கேளே ... ... (௩௮௯)

கேளேநீநீர்செரிப்பு திமிருவாதங்கெணிதமாய்ச்சோகையொ
டுமண்டைக்குத்து,வீளேநீமேல்வலிகள்சூலேநோயும் விதமானபுடை
சூலேமேகவாயும்,பாளேநீசொரிசிரங்கு தீருப்பாரு பண்பானகாத
டைப்புக்காதுக்குத்து, சூளேநீயிவையெல்லாந் தீருந் திடீஞ் சுகமா
னபோகருடகடாக்ஷந்தானே ... ... (௩௯௰)

வயிற்றுக்கடுப்புக்கு,

தானென்ற சுக்குமொருவிராகன்ரண்டு தயவாக மோருவிட்டு
மைபோலாட்டி, கோனென்றஅாசிலேயில்வைத்துத்லதத்துக் குண
மாகமோருவிட்டு வேகவைத்து,மானென்றஎழுதா மிந்தப்பாகமை
ந்தனேதயிருவடிக்கட்டிநேரே, வானென்றதாமரில் வைத்துவிழுங்
கும்போது வயிற்றிணாச்சல்கடுப்புமுதல்தீர்ந்துபோமே... (௩௯௧)

பேதிமாத்திரை?

போமேநீநேர்வாளஞ்சுத்திசெய்துபொங்கமூடனுமணக்குகா
சுக்கட்டி, ஆமேநீயோரொடையாய்நிறுத்துக்கொண்டுஆவின்பால்வி
ட்டணாத்துதுவனாப்போலே,தாமேநீ*குளிகையொன்றுவெந்நீரில்
கொள்தயவாகப்பேதியதுஆகும்பாரு,வாமேநீபேதியது அதிகமா
னுல்வளமானவசம்புதட்டிக கியாழங்கொள்ளே... (௩௯௨)
*குளிகை-மாத்திரை

தலைவலிசன்னிக்குப்புகை,

கொள்ளவேஇன்ன மொன்றுசொல்லக்கேளு கொடிதானபெ ருங்காய மோமஞ்சுக்கு, தெள்ளவே சாம்பிராணி மிளகுசாரம் தெளிவானசிற்றரத்தைக்கழல்பருப்பு, மெள்ளவேசீரக மூம்லிங்கங் கூடமேன்மைபாய்சமன்கொண்டு* அருக்கம்பாலில், தள்ளவேதிரி யாக்கிப்புகைதான்காட்ட தலைவலியுஞ்சன்னி முதலோடிப்போமே

*அருக்கம்பால்-எருக்கம்பால்

கர்ப்பூரக்குளிகை,

போமேநீசாதிக்காய்சாதிபத்திரி பொங்கமுடன்தக்கோலம்ஏ லங்கோஷ்டம், வாமேநீசந்தனம்வால்மிளகுங்கூட வகைவகைக்குவி ராகனெடைநிறுத்துப்போடு, தாமேநீகிராம்பதுவும் விராகன்மூன் றுதபவானகஸ்தூரிபச்சைப்பூரம், ஆமேநீகுங்குமப் பூவகைவகைக் கு அடவாகவிராகனெடையனாயுமாமே ... ... (ருகச)

ஆமப்பாஇளநீரா லரைத்துமைபோல் அடவாகக்குன்றிமணி போலுருட்டி, தாமப்பாநிழலுலர்த்திதாம்பூலத்தில் தயவாகத்தின் றுவரப்பலனைக்கேளு, வாமப்ப மூகவசியந்தேகங்காந்தி ளமான பல்லிலுள்ளவியாதிதீரும், வேமப்பாஅக்கினியாமந்தந்தீரும் வித மானசன்னிமுதல்மேகம்போமே ... ... (ருகரு)

போமப்பாகொடிவேலி நிலப்பனையின்மூலம் பொங்கமுடன் தண்ணீர்விட்டான்கிழங்குகூட, நாமேநீசீனிசர்க்கரையுங்கூடநாயக னேவகைக்குவகைப்பலந்தான்கேளு, தாமேநிபலந்தானே மூப்பதா குந் தயவானசேங்கொட்டை நாற்பதாகும், வாமேநிதூளிடித்து சூ ரணமேசெய்துவளமாகச்சர்க்கரையுநேரேகூட்டே... (ருகசா)

கூட்டேநீயிதிற்பாதி தேனுஞ்சேர்த்து குணமாகஇதினேரே ஆவின்னெய்யை, நாட்டப்பாநாற்பதுநாளந்திசந்தி நாயகனேபத்தி யந்தான்பாலுஞ்சோறும், வாட்டப்பாசர்க்கரையஞ்சீனியாகும் ள மானவிராகனெடை யைந்தேகொள்ளு, ஆட்டப்பாஇதனுடையபல னைக்கேளு அப்பனேபதினெட்டுச்சூலைபோமே ... (ருகள)

போமடாகுஷ்டம்பதினெட்டுந்தீரும் பொலிவானவிப்பை ந்துமூதிரமெட்டுந், தாமடாஅஷ்டகுன்மம்பாண்டுஆறுந் தயவான விஷக்கடியுமேகந்தீரும், ஆமடாபலமுண்டுநரையுமாறும் அடவான தேகமது அழகோகாந்தி, நாமடாபோகருடகடாக்ஷத்தாலே நலமா கப்புலிப்பாணிப் பாடினேனே ... .. (ருகஅ)

பல்லுக்குப்பொடி,

பாடியேஅரக்குடனேசீனகாரம்பண்பானதுருசுடனேகடுக்கா
யப்பா, நாடியேமாசக்காய்வகைவகைக்குநலமாகவிராகனெடை நிறு
த்துக்கொண்டு, ஆடியேகடுக்காயுந்தான்றிக்காயும் அரப்பொடியும்
வகைக்குவகைவிராகன்மூன்று, கூடியேயெலுமிச்சம்பழச்சாற்விட்
டுக் குணமாகவுலரவைத்துப்பொடியாய்ச்செய்யே ... (௱௯௯)

பொடியெடுத்துவிளக்கிவரப்பல்லைக்கேளுபழச்சாகு*மெயி
ற்கரையுந்தீரும்பாரு, இடியெடுத்தப்பல்லசைவுப்பல்லுக்குத்துளரி
வானவாய்ப்புண்ணுநாற்றந்தீரும், வடிவானப்பல்லொளிவுசியமூண்
டாம்வளமானப்பல்லிலுள்ளவியாதிதீருந், துடியானபோகருடகடா
க்ஷத்தாலேதுலக்கமாய்ப்புலிப்பாணிப்பாடினேனே ... (௨௱)

*எயிறுக்கரை-பல்லீறு

வாய்வுவிக்கல்சோகைக்குமருந்து

பாடிதிப்பிலிசுக்குமிளகுங்கூடப் பண்பாகம்ராகிணையும்பரிந்
துகேளு, நாடியேவகைவகைக்குப்பலந்தானொன்றுநாயகனேகடுக்கா
ய்த்தோல்பலந்தானாலு. கூடியேதூளிடித்து சூரணமேசெய்துகுண
மாகபனைவெல்லம்பலந்தானாலு. ஆடியேகோசலத்திலப்பாகாய்ச்சி
அப்பனேநெய்தேனில்கிண்டிப்போடே ... (௨௱௧)

போடேநீகழற்சிக்காயளவுகொள்ள பொருமலுடன் வயிற்று
வலிவிக்கல்சோகை, ஆடேநீமலக்கட்டுக்கிருமிதோஷம் அடவானம்மே
கசலஞ்சூலைவாயு, நாடேநீ நீர்ச்செருப்புமேல்வலியும்போகும் நா
யகனேவாயுவென்றரோகம்போகுங்-கூடேநீபோகருடகடாக்ஷத்தா
லேகுணமாகப்புலிப்பாணிப்பாடினேனே ... ...(௨௱௨)

கடுகெண்ணெய்,

பாடினேன்கடுகெண்ணெய்ப்படிதானொன்று பண்பானபெ
ருங்காயம் வசம்புசுக்கு, நாடியேகருநாவிசாம்பிராணிநாயகனேவெ
ள்ளுள்ளியோமம் * குப்பை. ஆடினேன் மாவிலிங்கப்பட்டைக்கூ
ட அடவாகவகைக்குவகைவிராகன்மூன்று, கூடினேன்மேனிச்சாற்வி
ட்டரைத்துக் குணமாக்கடுகுபதந்தனில்வடித்தே ... (௨௱௩)

*குப்பை-சதகுப்பி

வடித்தஎண்ணெய்த்துவளேயிடசன்னிபோகும் வளமாகவலிப்
புடனேசயித்தியந்தீருந், தடித்தவுடன்கால்குடைச்சல்மேல்வலியுந்
தீருந்தயவானகாதிரைச்சல்மண்டைக்குத்து, கொடிதானஎண்ணெய

டாவீரம்வீரங்கொற்றவனேஎண்ணெயுடஅருமைமெத்த,கெடியா னபோகருடகடாக்ஷத்தாலே கெணிதமாய்ப் புலிப்பாணி பாடினே னே ... ... (௨௱௪)

பஞ்சீகரணச்சிந்தூரம்,

பாடியேதங்கமதுஒன்றனாயுமாகும் பண்பானகாரீயமொன் றேகாலாம், ஆடியேசெம்பதுவுமொன்றேயாகும் அப்பனேஇரும் பதுவுமுக்காலாகுங், கூடியேநாகமதுஅரையுமாகுங்குணமானரசம துதான்விராகனேந்து, நாடியேகந்தகந்தான்விராகனேந்து நாயக னே அரிதாரம்விராகனென்றே.......... ....(௨௱௫)

ஒன்றான இவையெல்லாம்* பொற்றலையின்சாற்றால் ஒளிவாஇ ருசாமமைபோலாட்டி, பன்றாகப்பொடிசெய்துகுப்பிக்கேற்றிப்ப ண்பான*மாக்கல்லுக்கொண்டுமூடி,வன்றாகக்குப்பிக்குச்சீலையேழு வளமாகத்தான்செய்துவாயைவிட்டு, நன்றாகசட்டியிலேமணல்தான ப்பாநலமாகவிரல்நாலுவுயரம்போடே.......... ....(௨௱௬)

பொற்றலை-பொற்றலைக்கையான்தகரை-

மாக்கல்-பலப்பக்கல்-

போடேநீகுப்பிவாய்த்தெரியமூடி பொங்கமூடன்தானெரிப் பாய்க்கமலம்போலே-ஆட்டேநீநாற்சாமமெரித்தபோதுஅப்பனேசி ந்தூரமாகும்பாரு- கூட்டேநீஆவின்பால்வெண்ணெய்தன்னில் குண மாகப்பணவெடையில்பாதிகொள்ள -நாட்டேநீநாற்பதுநாள்கொண் டபோது நாயகனேவியாதியெல்லாந்தீருந்தானே........(௨௱௭)

தானென்றதேகமதுவலுத்துப்போச்சு தயவானவசிகரமுங்கா ந்தியுண்டாங்-கேளென்ற*ரசிதமதும்வழுகூட்டி குணமானசெம் பதிலேமூன்றுஞ்சேர்த்து - வானென்றதங்கமதுஒன்றுங்கூட்டி வ ளமாகத்தானுருக்கி குருவென்றீய-தேனென்றகரிப்போலேயிருக் கும்பாருசெம்மையாய்யோட்டில்வைத்தூத்திப்போட்டே -(௨௱௮)

*இரசிதம்-வெள்ளி-

போடேநீமாற்றைந்துஇருக்கும்பாரு பொங்கமூட னெடைக் கெடைதான்தங்கஞ்சேர்த்து - ஆட்டேநீசிவனத்லைதச்செய்துகொண் டு அடவானசாஸ்திரத்தையறிந்துப்பாரு - கூட்டேநீபஞ்சிகரணச்சிந் தூரந்தான் குணமாகுந்தேகமதுஇறுகும்பாரு-தேட்டேநீபோகருட கடாட்சத்தாலே தெளிவானபுலிப்பாணிபாடினேனே... (௨௱௯)

சோகைகாமாலைக்குலேகியம்,

பாடியேசுக்குடனேமிளகுகூடப் பண்பானதிப்பிலிசீரகமு மோமம்-ஆடியேகாட்டுச்சீரகமுமிஞ்சி அப்பனேசாதிக்காய்கிராம் புசோம்பு - நாடியேகடுகுகாய்ரோகணிபுமேலம் நலமானசழல்பரு ப்புஅரத்தைசிறுதேக்கு - கூடியேவகைவகைக்குவிராகன்மூன்று

கொற்றவனே தூளிடித்துச்சூரணமேசெய்யே.......... (௨௱௰)

செய்யப்பாவெள்ளரட்டுப்பழுக்கைத்தூளுஞ் செயமாகவடி கட்டிசரக்கின்னேமே-வையப்பாகரிப்பன்சாற் படிதானொன்றுவள மாகப்பனையுடையகருப்புக்கட்டி - வையப்பாஎழுபலம் நிறுத்துக் கொண்டுநலமாகத்தேன்படியு மனாதான்வாரு - கையப்பாஆவின் னெய்ப்படிதான்பாதி கனிவாகலேகியமாய்க்கிண்டிப்போடே-...()

போடேநீநெல்லிக்காயளவுகொள்ள பொல்லாதநீர்க்கோவை பாண்டுசோகை-ஆடேநீகாமாலேசோகைவாயு அப்பனேநெஞ்செரி வுநீர்ச்செருப்பு- கூடேநீஅக்கினியாமந்தந்தீருங் குணமானமந்தமு தல்குன்மந்தீரும்- நாடேநீம்பாகருடகடாட்சத்தாலே நலமாகபுலிப் பாணிபாடினேனே.......................... (௨௱௰௨)

பஞ்சீகரணமாத்திரை,

பாடினேன் *தாரமொன்றனையுமாசம் பண்பானசைவீரமொ ன்றேகாலாம் - நாடியேகௌவுரியதுஒன்றேயாகும் நலமானவெள் ளையதுமுக்கால்சேர-ஆடியேலிங்கமது அரையாம்பாரு அப்பனே பொடிசெய்துவுருக்கிவாரு-கூடியேகிரிகடுகுப் பொடியுந்தேனும் கொடுப்பாயேபணவெடைதான்நோய்கட்போமே... ...(௨௱௰௩)

*தாரம்-அரிதாரம்-

போமேதான்வாயுவொடுகுன்மரோகம்பொல்லாதநெஞ்சடை ப்புபிரமைமூர்ச்சை- தாமேநீசயரோகம்வாந்தியேப்பம் தபவில் லாசுரங்களொடுதொண்டைக்கம்மல ஆமேநீவிஷிபாகங்காமாலேசோ கைஅப்பனேசன்னியொடுவலிப்புந்தீரும்- நாமேதான்போகருடக டாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணிபாடினேனே... .. (௨௱௰௪)

பஞ்சமுகச்சிந்தூரம்

பாடினேன்சாதிலிங்கம்ரசமுஞ்செந்தி பண்பாவீர முடன் தாரங்கூட்டி- ஆடினேனிவையெல்லாஞ்சமனாய்க்கொண்டு அடவா க க்காட்டாமணக்கின்பாலாலாட்டி-நாடியேவில்லைதட்டி யுலரவைத் துநலமானப்புடமதுதான்சோழியாகும்.கூடியேயாறவிட்டுஎடுக்கு ப்பாரு கொற்றவமினசிந்தூரமாகுந்தானே..... ..(௨௱௰௫)

தானென்றசிந்தூரம்பணவெடைதான்கொள்ள தயவான*தி ரிகடுகுபொடியிலப்பா-பானென்மதேனுதுப்வெண்ணெயாகும் ப ண்பானபனையுடையகருப்புக்கட்டி - மேவனென்றவிதுகளிலேகொ

ளும்போது வெடிசூலைகுஷ்டமுதல்கறுப்புவெள்ளைக்-கோனென்ற
மேகத்தாலெரித்தமேகங் சொற்றவனேகுன்மமுதல்வாயுபோமே-

* திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி-

இரசசிந்தூரம்,

போமேதான்ரசப்பத்துகெந்திபத்து பொங்கமுடனரிதார
ம்ஒன்றுங்கூட்டி, ஆமேதான் அம்மியிலேபொடியாய்ப்பண்ணி அ
ப்பனேவறுத்தெடுநிகைபாகமாக, தாமேதான் * அண்டத்தைப் பொ
டித்துக்கொட்டி தயவாகஅதிற்பாதிபோட்டுமூடி, வாமேதான்மண
லில்வைத்துக்குக்குடத்தைப்போடு-வளமானச்சிந்தூரமாகும்பாரே

அண்டம்-கோழிமுட்டை * குக்குடம்- கோழியளவுபுடம்

பாரேதான்பணவெடைதான்பனைவெல்லத்தில்பாங்காகக்கொ
ண்டவுடன்பறங்கிச்சூலை, சேரேதான்கிரந்தியொடுகுஷ்டரோகச்செ
யலானதாதுநஷ்டப்லிங்கட்புற்று, தீரேதா னரையாப்புவிற்புருதி
யோடுதிறமாகதேகமதுகாந்தியுண்டாம், வீரேதான் போகருடகடா
ட்சத்தாலே விளம்புகின்றேன்புலிப்பாணிவிளங்கத்தானே(௨௱௰௮

நீரெரிவுக்கு,

தானென்றநீரெரிவுகண்டதானால் தயவாகக்கட்டுக்கொடியிலை
யரைத்து, வானென்றநிம்பக்காயளவுதானும் வகையாகக்கால்படி
யாஞ்சலத்திற்சேர்த்து, கோனென்றசீரகமும் ஏலந்தானும்கொடிதா
கவிராகனெடைப் பொடித்துப்போட்டு, ஆனென்றசீனிசர்க்கரை
தான்கூட்டு அடவாகக்கலந்துகொண்டுஉண்டுபாரே.. .. (௨௱௰௯)

புரையாத்திரணங்களுக்குதயிலம்,

பாரேதான்நொச்சிவேர் அழிஞ்சில்வேரும் பண்பானவிழுதி
வேர்சமனாய்ப்போட்டு, சீரேதான்குழித்தயிலமாகவாங்கிசிறப்பாக
ப்புரைகளுக்குவிட்டபோது. கூரேதான்விற்புருதிகண்டமாலை சுறி
ப்பானஅரையாப்புக்கன்னப்புற்று, நேரேதான்தொடைவாழைசுழி
வாழையோடேநாரணப்பிளவையொடுதீரும்பாரே........(௨௱௨௰)

பறங்கிப்பட்டைபதங்கம்.

பாரேதான்பறங்கிப்பட்டையப்பா பாங்காகப்பலமைந்து
நிறுத்துக்கொண்டு, சேரேதான்பொடிப்பொடியாய்க் கண்டமாக்கி
சிறப்பாக * வேசரியின்லத்திசாற்றில், வீரேதான்பிசறியதையுலர்த்தி

வைத்துவிதமாகமேனிச்சாற்பொடுதலைச்சாற்கூடேதான்கையான்சா
ற்குப்பிச்சாறும் பூரணமானபசுவின்பாலின்னங்கேளே ... (௨௨௧)

*வேசரி-கழுதை

கேளேநீவெவ்வேறேயுலர்த்திக்கொண்டு கெணிதமுடன்கெந்
தகமும்பலந்தானென்று-வாளேநிரசமைந்துலிங்கமைந்துவகையாக
பொடிப்பண்ணிமூன்றும்போடு-வீளேநீமறுசட்டிதமர்கள்போட்
டுவிதமாகச்சட்டிவாய்த்தன்னில்மூட்டி- சூளேநீபட்டையைத்தான்
மேலேவைத்துச்சுகமாகமறுசட்டிக்கொண்டுமூடே ...... (௨௨௨)

மூடியேமண்சீலைவலுக்கச்செய்து மூசியாமல்தானெரிப்பா
ய்சாமமொன்று-ஆடியேயாறவிட்டெடுத்துலர்த்தி அப்பனேசூரண
மாய்ச்செய்துக்கொண்டு- நாடியேகழஞ்சியொன்றுகொண்டாயானா
ல்நலமாகமேகவகையிருபத்தொன்றும் - ஓடியேபோகுமடாசூலை
யெல்லாம்உத்தமனேகருங்கிரந்திதீருந்தானே......... ... (௨௨௩)

தீருமேகைக்கருப்புவெள்ளைத்தானும் திறமானபிடிப்புவகை
ரணங்கள்யாவும்- ஆருமேரணங்கள்வகைசிரங்குகுஷ்டம் அப்பனே
சேர்ந்தாலேதடிப்புந்தீரும்-கூருமேவாய்நாற்றம்தந்தச்சூலைகுணமா
கமண்டலந்தான்தின்றால்தீரும் - பாருமேபத்தியந்தானிதற்கோ இ
ல்லைபண்பாகப்போகருடகடாட்சந்தானே................(௨௨௪)

வல்லாதிதைலம்-

தானானவல்லாதிதயிலமொன்று தயவாகசேங்கொட்டை அழி
ஞ்சிக்கொட்டை-மானான*பூவந்திக்கொட்டையோடுமைந்தனேயெ
ட்டியுடக்கொட்டைதானும்- வானானவேம்பின்புண்ணாக்குங்கூட வ
கையானசிவன்வேம்புஇவைகளெல்லாங்-கானானஇவையெல்லாஞ்சரி
யெடையாய்தூக்கி கனிவான*கன்னியுடச்சாற்றில்போடே (௨௨௫)

*பூவந்தி-மணிபுங்கு.

*கன்னி-கற்றாழை-

போடேநீயொருநாள்தானூறவைத்துப் பொங்கமுடனிருநா
ள்தானெடுத்துலர்த்தி- ஆடேநீகுழித்தயிலமாகவாங்கி அப்பனேகா
செடைதான்கொண்டாயானால்,நாடேநீபணவெல்லந்தன்னிற்கொள்
ளு நாயகனேசூலைபதினெட்டுந்தீரும் - வாடேநீபோகாமல்மண்டல
ங்கால்கொள்ள- மைந்தனேபத்தியந்தானென்றுகாதே..... (௨௨௬)

இடிவல்லாதி

ஒன்றானவல்லாதிசொல்லக்கேளு உத்தமனேசேங்கொட்டை
ப்பலந்தான்பத்து-நன்றாகமூக்குவெட்டிச்சாணிப்பாலில்நலமாகமூ
ன்றுநாளூறவைத்துஅன்றானக்கல்லூரலிற்றானேபோட்டுஅப்பனே

யெள்ளதனையிடித்துப்போட்டு - கன்றானகொப்பனாத்தேங்காயிர ண்டு கனிவாகத்தானிடித்துக்கனிவாய்ப்போடே... (உஉஎ)

போடேநீபறங்கியுடப்பட்டையப்பா பொங்கமுடனமுக்கரா சித்ரமூலம்-கூடேநீகஸ்தூரிமஞ்சளோடு குணமானகருஞ்சீரம் வா லுழுவையோடு-தேடேநீகுருசாணிவோமத்தோடு தெளிவானவெத் திலையின்காம்புதானும் --நாடேநீகடுக்காயுந்திப்பிலிதானும் நலமா னகோஷ்டம்வகைவகைக்குக்கேளே ... (உஉஅ)

கேளேதான்வகைவகைக்கோர்பலமாய்த்தூக்கிசெணித முடன் சூரணமாய்ச்செய்துக்கொண்டு-வாளேதான்கல்லுரலில்மயனம்போ லேவகையாகஇடித்ததனைச்சொல்லக்கேளு-ஆளேதான்ரசகற்பூரமு மப்பாஅடவாகவிராகனைந்தேபொடித்துப் போட்டு- சாடேதான்ப னவெல்லம்பலந்தானைந்து சார்வாகப்போட்டிடிப்பாய்தயவாய்த்தா னே ... ... (உஉகூ)

தானென்றவல்லாகி அந்திசந்தி தயவாகவெருகடி மண்டலமே கொள்ள-வானென்றகுஷ்டமொடுகிரந்திசூலை வகையாகஅரையாப்பு மேகமெல்லாம்- கோனென்றகுன்மமெட்டுஞ் சுக்லவாய்வு குணமில் லாரணரோகங்கிரந்திதிரும்-ஏனென்றபத்தியந்தா னிச்சாபத்தியம் இதமானவுப்புமுதல்வறுத்துக்கூட்டே ... ... (உ௩ய)

கூட்டப்பாதயிர்மோருநெய்யுமாகுங்குணமானதுவரையுடப ருப்புமாகும்-நாட்டப்பாபாசியென்றபயருமாகும் நலமானநல்லா ரைப்பொன்னாங்காணி-ஆட்டப்பாகரப்பனென்றபதார்த்தந்தள்ளு அடவாகமற்றெல்லாமாகும்பாரு- ஆட்டப்பா விளக்கெண்ணெய்த் தேய்த்துமுழுக்கு அடவாகசுந்திரம்போல்தேகந்தானே ...(உ௩க)

நோயின்நக்ஷத்திரங்களறிய.

தானென்றஅசுபதிநாள்முதற்காலப்பா தயவாகவொன்பதுநாள்சு ரமேதிரும்-தேனென்றரண்டாங்கால்கொல்லுமப்பாதிறமாகபத்தாநா ள்மரணமாவான்-கோனென்றமூன்றாங்கால்பதினைந்தாகும் குணமா கநாலாங்கால்மரணஞ்செய்யும்-வானென்ற பரணிதனின்முதற்கால் மூன்று வளமானரண்டாங்கால்வேழாமென்னே... (உ௩உ)

என்னவேமூன்றாங்கால்பதினைந்தாகும் எளிதில்லாநாலாங்கால் பதினைந்தாகும்- நன்னவேகார்த்திகைக்குமுதற்காலானால் நலமான வொன்பதாநாள்திரும்பாரு- பன்னவே ரண்டாங்கால்பத்தேயாகும் பண்பானமூன்றாங்கால்பதினைந்தாகும்-அன்னவேநாலாங்கால்நாற்ப த்தெட்டு அடவாகரோகணியில்முதற்கால்பத்தே ... (உ௩௩)

பத்தானரண்டாங்கால் பதினெட்டாகும் பண்பானமூன்றுங்கா
ல்எண்ணுங்கப்பா-பெத்தானநாலாங்கால் எண்பத்திரண்டுயேதமில்
லைதீர்ந்துவிடுயின்னங்கேளு-முத்தான*மான்றலையின் முதற்காலப்
பாமுப்பதுநாளானபின்புதீரும்பாரு-சித்தானரண்டாங்காலிருபத்
தெட்டுதிறமானமூன்றுங்கால்பதினைந்தாமே ... ...(௨௫௪)

*மான்றலை-மிருகசீரடம்.

ஆமேதான்நாலாங்கால்முப்பத்தைந்து அடவானஆதிரைநாள்
முதற்கா*லொன்பான்-தாமேதான்ரண்டாங்கால்மரணமாகும் தய
வாகமூன்றுங்கால்நாள்தான்பத்து-வாமேதானாலாங்கா லிருபத்தைந்
துவளமானபுநர்பூசம்நாள்தானேழு-போமேதானி ரண்டாங்கால்நா
ள்தான்பத்து பொங்கமுடன்மூன்றுங்கால்பதினெட்டாமே(௨௫௫)

*ஒன்பான்-ஒன்பது.

ஆமப்பாநாலாங்கால்மரணஞ்செய்யும்அடவான பூசமப்பாமு
தற்காலேழு-சோமப்பாரண்டாங்கால் பனிரண்டாகுஞ் சுகமானமூ
ன்றுங்காலொன்பதாகும்-காமப்பாநாலாங்காலிருபத்தேழுகனிவான
வாயிலியமுதற்கா லொன்பான்- தாமப்பா ரண்டாங்காலிருபதாகுந்
தயவானமூன்றுங்கால்தொண்ணூறுதானே... ... (௨௫௬)

தானானநாலாங்கால்*முப்பத்தொன்பான் தயவானமக முதற்
கால்மரணஞ்செய்யும்-வானானரண்டாங்கால் முப்பதாகும்வளமான
மூன்றுங்கால்எண்பத்தைந்து-கூனான நாலாங்கால் நாள்தானைந்துகு
ணம்பூரமுதற்கால்தான்சாவுமாகுந்-தேனானரண்டாங்காலிருபத்தை
ந்தில்சிறப்பானமூன்றுங்காலிருபத்தாறே ... (௨௫௭)

*முப்பத்தொன்பான்-முப்பத்தொன்பது.

ஆறானநாலாங்காலெண்பதொன்றும் அடவான வுத்திரந்தான்
முதற்காலெட்டு-வீறானரண்டாங்கால்முப்பதாகும் விதமாகமூன்று
ங்காலன்பத்திரண்டாந்-திறானநாலாங்கால்மரணமாகும்திறமான அ
ஸ்தமுதற்கால்தானெட்டு-கூறானரண்டாங்கால்பதினைந்தாகுங் குண
மானமூன்றுங்காலிருபத்தெட்டே ... ... (௨௫௮)

எட்டானநாலாங்காலெண்பத்திரண்டு எளிதானசித்திரையுமுதற்
காலொன்பான்-நெட்டானரண்டாங்கால்பதினைந்தாகும்நேரானமூ
ன்றுங்கால்பன்னிரண்டு-கிட்டானநாலாங்கால் நாற்பத்தொன்று கெ
தியானசோதிமுதற்காலீராறு-குட்டானரண்டாங்கால்பரணஞ்செய்
புங்குணமானமூன்றுங்காலெண்பத்தெட்டே ... (௨௫௯)

எட்டானநாலாங்காற்பன்னிரண்டு எழிலான விசாகமுதகால்ஒ
தானொன்பான்-தட்டானரண்டாங்கால்நாள்தான்மூன்று தயவான மூ

ன்றாங்கால்நாற்பதாகும்-பட்டானநாலாங்கால்எண்பத்தொன்றாபாங்
கானஅனுஷமுதற்கால்தான்சாவு-சிட்டானரண்டாங்காலிருபதப்பா
செயலானமூன்றாங்கால் தொண்ணூறென்னே .. (௨௪௰)

என்னவேநாலாங்கால்நாற்பதாகும் எழிலானசேட்டை முதற்
கால்தான்சாவு-நன்னவேரண்டாங்காலிருபதப்பா,நாயகனேமூன்றா
ங்கால்முப்பத்தொன்று-வன்னவேநாலாங்கா லெண்பத்திரண்டு வள
மானமூலமுதற்கால்தான்சாவுஅன்னவேரண்டாங்காலொன்பதாகும்
அடவானமூன்றாங்கால்நாள்தான்பத்தே ... (௨௪௧)

பத்தானநாலாங்கால்பதினெட்டாகும்பண்பானபூராடமுதற்கா
லொன்பான்-சித்தானரண்டாங்கால்மரணஞ்செய்யுஞ் செயலானமூ
ன்றாங்கால் நாள்தான்பத்து-வித்தானநாலாங்கா லன்பத்திறனுவித
மானஉத்திராடமுதற்காலேழு- நித்தான ரண்டாங் காலிருபதாகும்
நேரானமூன்றாங்காலன்பதாச்சே ... ... (௨௪௨)

ஆச்சப்பாநாலாங்கால்நாற்பதாகும் அடவான*ஓணமுதர்பதி
னொன்றப்பா-பேச்சப்பாரண்டாங்கால்பத்துநாளாம் பேதமில்லை
மூன்றாங்கால்நாள்தானெட்டு-வீச்சப்பாநாலாங்கால்மரணஞ் செய்
யும்விதமான அவிட்டமுதற்கால்தானொன்ப ன் நீச்சப்பா ரண்டாம்
கால்பதினைந்தாகும்நிசமானமூன்றாங்கால்முப்பத்திரண்டே (௨௪௩)

* ஓணம்-திருவோணம்

ரண்டானநாலாங்கால்முப்பத்தொன்பான் நிசமானசதயமுத
ற்கால்தானேழு-வண்டானரண்டாங்கால்பத்தாம்பாரு வளமானமூ
ன்றாங்கால்நாள்தானாறு- திண்டானநாலாங்கால்நாள்தானைந்துதிறமா
னபூரட்டாதிமுதற்கால்சாவு- கொண்டானரண்டாங்கால்பதினாறாங்
குணமானமூன்றாங்காலெழுபத்தொன்றே... ... (௨௪௪)

ஒன்றானநாலாங்கால்நாற்பத்தொன்று ஒளிவுவுத்திரட்டாதிமு
தற்காலேழு-நன்றானரண்டாங்கால்பதினெட்டாகும்நலமானமூன்றா
ங்காலேழாம்பாரு-குன்றானநாலாங்காலிருபத்தெட்டுக்குணமானரே
வதியுமுதற்கால்சாவு-அண்டானரண்டாங்கால்பதினொன்றப்பா அட
வானமூன்றாங்கால்பதினெட்டாமே... ... (௨௪௫)

மரணநாளறிய.

ஆமேநீநாலாங்காலிருபத்தாறு அடவானமரணமென்றநாள்தா
ன்சொல்வேன்-வாமேநீ* அருக்கநாள்பரணியாகா வளமானதிங்கட்சி
த்திரையுமாகா-தாமேநீசெவ்வாய்க்குவுத்திராடந்தயவான புதனுக்கு

* அருக்கநாள்-ஞாயிறு

அஸ்தமாகா-நாமேநீ*குருநாள்தான்கேட்டையாகாநல்மான* புகர் நாள்பூராடந்தீதே ... ... (உசசு)

*குருநாள்-வியாழம்.

*புகர்நாள்-வெள்ளி

தீதானசனிநாள்ரேவதியுமாகா தீங்குவரு மின்னுளில்நோய்கள்கண்டால்-வாதானநமனுக்குஅறுதியாகும்வந்தநோய், தீராதுகொல்லுங்கொலலுந்-தானுனவைத்தியரே நூலைப்பார்த்து தயவாகவைத்தியங்கள்செய்யவேணுங்-கோனுனபோகருடகடாட்சத்தாலேகொற்றவனேபுலிப்பாணிசொன்னேனென்பாரே ... ... (உசஎ)

சகலமேகங்களுக்கு ரசகெந்தி மெழுகு

பாறேநீரசங்கெந்திரசகர்ப்பூரம்பண்பான அரிதாரமூசிகாற்தம்-சீரேநீதுருசுதீதுத்த மிருத்தார்சிங்கி சிறப்பானசுக்குடனே ஓமமஞ்சள்-வாரேநீதிப்பிலியுமரத்தைகோஷ்டம் வளமானவாலுழுவை சோம்புஏலங்- கூரேநீசாதிக்காய்மிளகு*சீரங் குணமானகார்போகமாசிக்காயே ... ... (உசஅ)

*சீரம்-சீரகம்.

காயானதேசவரம்வாய்விளங்சங் கனிவசப்புலவங்கமுடன்பரங்கிப்பட்டை-தாயானசேங்கொட்டைகடுக்காய்த்தோலும் தயவானகருஞ்சீரகக்காட்டுச்சீரம்பாயானசிறுதேக்குத்தாளிசபத்திரிபண்பாகமூந்திரிகைபிரம்பின்மூலம்-வாயானஎட்டிவிரைதேற்றான்வித்துவளமானநீர்ப்பூண்டு எள்ளுமாமே ... ... (உசகூ)

*பிரம்பின்மூலம்-பிரப்பங்கிழங்கு

ஆமேறநற்கொள்ளுடனே தேங்காய்க்கூட அடவானசின்னிவேர்சங்கம்வேரும்-தாமேநீஅமுக்கராசொல்லன்கோவை,தயவான கொடிவேலிமூலத்தோடு-வாமேநீவலைகவலைக்கு விராகனொன்றுவளமானகோழிமுட்டைரண்டுவாரு-போமேநீயிவையெல்லாம் பொடியாய்ச்செய்து பொங்கமுடன்கல்லுரலில்போட்டுக்குத்தே ... (உருய)

குத்தப்பாஇதுநேரேபணவெல்லந்தான் குணமாகநால்சாமமிடித்துத்தீரு-பெத்தப்பாவழித்தெடுத்துசிமிழில்வைத்து பேதமில்லைசுண்டக்காய்விதங்கொள்ள-மூத்தப்பாமோருஞ் சோறுண்டுமுன்னேமூசியாமல்மருந்துண்ணுமண்டலந்தான்-சித்தப்பா முபுகுறாவ்மருந்துண்ணுதேசிறப்பாகப்பத்தியந்தானில்லைதானே... (உருக)

தானென்றவெடிசூலைமேகசூலைதயவானஇடிசூலைபுடைக்குஞ்சூலை-வானென்றதுடிசூலைவாதசூலைவளமானகால்குடைச்சல்கரணை

தீரும்,மானென்றஆப்புலிப்புருதிமாலை மதியாதகுட்டமொடுவிஷ நீர்தீரும்-கோனென்ற* குஷ்டரோயுஞ்சிரங்குதீரும் குணமானபு வெட்டுதடிப்புபோமே.............................. ... ...(உருஉ)

*குஷ்டரோய்கால்விரல்கள்கைவிரல்கள்குஷ்டகிற
பதினெட்டுக்குஷ்டத்தொன்று

போமேநீயோனிதனில்லிங்கந்தன்னில் பொலிவானஆனமய டிசிலந்திமேகம், தாமேநீசெங்கிரந்திகருங்கிரந்தி தயவானஅரிகிரந் திபொரிகிரந்தி,வாமேநீபருகிரந்தியிடிகிரந்தி வளமானஇடிவிழுந் துபுரைமேற்புண்ணு,ஆமேநீஅஷ்டகடியுந்தண்டிற்புண்ணு அடவா னக்குள்ளிமாதேவியாமே ....(உருக)

ஆமேநீதுடைவாளைமுட்டுவாளை அடவானகுழிவாளைமூதகு வாளை,சேமேநீபுழுவாளைவிலாவில்வாளை செயலான* தமர்க்காயாச் சிலந்தியோடு,ஓமேநீகுறிப்புற்றயேகனிப்புற்று· ஒளிவானஇடிபுற் றுகன்னப்புற்று, தாமேநீபலச்சிலந்திக்கன்னத்தோசை சதைவளரு ங்கண்ணோசைபோகும்பாரே-..................................(உருச)

*தமர்காயாச்சிலந்தி - துளையாருச்சிலந்தி-

பாரடாபிளவையொடுபிளவைப்பூச்சி பண்பானராசனென்ற பிளவையோடு,கூரடாநேத்திரமெல்பிளவையோடு கொடிதுதடிச் சிலந்திபுடைச்சிலந்தியோடு, நேரடாபவுத்திரங்கள்மூளைமூலங்கள், நெடியபதமெட்டுச்சக்கரத்திஞேடு, வீரடா இவைகளெல்லாந்தீரு ம் விதமாகப்போகருகடாட்சந்தானே .... (உருரு)

பிலலிக்குத்துவளை.

தானேதானின்னமொன்றுசொல்லக்கேளு தனிக்காட்டுச்சீரகத் தினிலையைவாங்கி, ;வானேதான்கசக்கியதைதடவும்போது வளமான வெடிபில்லியெரிவுவீக்கம், கோனேதான்மேலெரிப்பு ஆறும்பில்லி குணமாகும்பார்வைமுதல்திஷ்டிதீரும், ஆனேதான்போகருடகடா ட்சத்தாலே அடவாகப்பாடுகிறேன் புலிப்பாணியாமே... (உருசா)

குமட்டிக்காய்ப்பதங்கம்.

ஆமேகேள்குமட்டிக்காய்ப்பதங்குஞ்சொல்வேன் அப்பனே தழுதழையுமாவிப்பட்டை, தாமேநீகொடிவேலியமுக்காரவேர் த யவாகப்பாவட்டைமுடக்கற்றானும்,வாமேநீவெள்ளச்சாரணையுங்கூ ட வளமானசத்திச்சாரணையுமப்பா,நாமேநீவவகையுடனேநல்லவேளை நலமானதுதுவளைசடைச்சியாமே ....(உருஎ)

ஆமப்பாகுப்பையென்றமேனிக்கூடஅடவாகசிவன்வேம்புஅ வரிக்கூட்டி, தாமப்பாவில்வவேர்மாவிலிங்கந் தயவாகப்பிரம்பிணு

டகிழங்கினோடு-வாமப்பாவகைவகைக்குப்பலந்தால் வேறுவளமாகத்
தூக்கிச்சூரணமோசெய்து, கோமப்பாசரக்குவகை சொல்லக்கேளு
குணமாகப்போகருடகடாட்சந்தானே...................(உருஅ)

தானென்றசுக்குடனேகிராம்புவோமம் தயவாக தேசவாஞ்சி
றாநாகப்பூ,வானென்றமிளகுதாளிசையாம்பரித்தி மைந்தனேதிப்பி
லிவால்மிளகுகூட்டு, காவென்றதிப்பிலியின்மூலமப்பா கருவானச
தகுப்பைபரங்கிப்பட்டை, கோவென்றஅரத்தையதிவிடையங்கூட
குணமானகருஞ்சீரகந்தான்கூட்டே...... ....(உருகூ)

கூட்டப்பாவகைவகைக்குவிராகனைந்து குணமாகச்சூரணமா
ய்ச்செய்துக்கொண்டு,நாட்டப்பாஇருதூளுங்கலவத்திட்டு நலமான
திருகுகள்ளிப்பால்தாலேகளுமாட்டப்பாவிராகனெடையைந்துவா
ருமைந்தனேவேலியென்றபரித்திச்சாறு, ஆட்டப்பாகொள்ளமட்டு
ம்விட்டுஆட்டி அப்பனேமைபோலேயரைத்துலர்த்தே... (உசூய)

உலர்ந்தபின்புகுமட்டிக்காய்க்கொண்டுவந்துஉத்தமனேவிரை
சதையும்போக்கிப்போட்டு, அலர்ந்தபின்பு அதிற்செலுத்திவாயை
மூடிஅப்பனேபாண்டத்தினுள்ளேவைத்து, மலர்ந்தபின்மண்சட்
டியில்மண்சீலைசெய்து மைந்தனேகுழிவெட்டிபுடத்தைக்கேளு,க
லர்ந்தபின்புவெள்ளாட்டேருவைகொட்டிகனமாகப்பாண்டத்தைப்
புதைத்துப்போடே.......... ....(உசூக)

போடப்பாலகுபுடமதாகப்போடு பொங்கமுடன்கருகாமலெ
டுத்துக்கொண்டு, நாடப்பாதூளையெல்லாம்வொன்றிற்கொட்டிநல
மாகநிழலுலர்த்திவைத்துக்கொண்டு, கூடப்பாசாதிக்காய்விராகன்ப
த்துகுணமானகுங்குமப்பூவிராகன்பத்து, ஆடப்பாபொடியைச்சூ
ரணமாய்ச்செய்து அப்பனேவொருகடியாய் கொண்டிடாயே ()

கொண்டபின்புஎருமைமோர்சோறுமுண்ணு கொற்றவனேஉ
ப்பதுதான்வறுத்துக்கூட்டு,கண்டபின்புமற்றதொன்றுமாகதப்பாக
ருவானமூன்றுநாளாறுவேளை,உண்டபின்புவயிறுளைந்தால் நிறுத்தி
ப்போடுஉத்தமனேயில்லாவிட்டால்மருந்தையுண்ணு,விண்டபின்பு
போகருடகடாக்ஷத்தாலேவிதமாகப்புலிப்பாணிவிளம்பினேனே ()

விளம்புகிறேன்நோய்தீரும்விபரங்கேளு விதமானவாதமொ
டுவாதசூலை, தளம்புறேன்காலுகைமுடங்கினாலுந் தயவில்லா*பட்ச
மென்றவாதம்போகும்,கிளம்புகிறேன்சீரணமும்பொருமல் திருங்
கிருமையுடன்வயிற்றுவலிகுன்மம்போகும், அளம்புறேன் போக
ருடகடாக்ஷத்தாலேஅன்பாகப்புலிப்பாணிஅருளினேனே (உசூச)

*பட்சவாதம்-பாரிசவாயு.

சூதச்சிந்தூரம்.

அருளாலேயின்னமொன்றுசொல்லக்கேளு அடவானகெந்தகந்தான்விராகனென்று, பொருளானரசமதுதான்விராகனென்று பொங்கமூடனிருசாக்குக்கல்வத்திட்டு,மிருளாலேசிற்றுமணக்கெண்ணெய்விட்டுமீறுமல்மெழுகதுபோலரைத்துருட்டி,திருளாலேநாற்பட்டுமேலேசுற்றி திறமாகக்கொடிவேலிப்பட்டைக்கேளே (௨௯௫)

கேளேநீபட்டையைத்தான் தண்ணீர்விட்டுக் கிருபையுடன்அரைத்தெடுத்துக்கவசங்கட்டி,நாளேநீகுகையினுள்ளேசிப்பிதூளை நன்றாகத்தான்போட்டுமேலேவைத்து, சூளேநீமேலுமந்தப் பொடியைப்போடுசுகமாகச்*சில்லிட்டுமண்சீலைசெய்து,தாளேநீ*சாணுமியில்புடத்தைப்போடு தயவாகப்புடமிட்டுச்சிந்தூரமாமே ... ()

*சில்லு-புதியஓடு-

*சாணுமியில்-சாண்ஒயரமுள்ளஉமியில்-

ஆமப்பாநோய்களெல்லாமகன்றுபோகும் அடவாகத்தேகமதுசிவந்துமின்னும்,போமப்பாபெரியோர்கள்கடாட்சஞ்செய்வார் பொங்கமூடன் தேவதைகள்கிருபைகூருந், தாமப்பாசிந்தூரமுண்டோர்க்கெல்லாம் தாழ்வொன்றும்வாராதுகர்மந்தீரும், நாமப்பாபோகருடகடாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணிபாடினேனே- ()

கெந்தகரசாயனம்.

பாடினேன் கெந்தகந்தான்வேணமட்டும் பாங்காகவாங்கிவந்துசொல்லக்கேளு, ஆடியேகலசமதில்பசுவின்பாலை அடவாகத்தானூற்றிப்புதைத்துப்போடு, கூடியெசிறுகலசந்தமர்கள்போட்டுகுணமானபாற்கலசமேலேவைத்து,நாடியேகெந்தகத்தையிதற்குள்ளிட்டுநாயகனேசில்லிட்டுசீலைசெய்யே.................(௨௯௮)

செய்தபின்புலகுபுடமதாகப்போடு சிறப்பானகேந்தியதுதிறமதாச்சு, கொய்தபின்புஅதையெடுத்துக்கழுவிப்போட்டுக் குழியம்மிதன்னில்நீர்ப்பூண்டின்சாற்றில், பைதபின்புதனையரைப்பாய்சாமமைந்து பாங்காகஅதையெடுத்து வைத்துக்கொண்டு, செய்தபின்புவிராகனெடைபாதிதானுந்தீவரமாய்ப்பணவெல்லந்தன்னிற் கொள்ளே ... ... (௨௯௯)

கொள்ளவேமண்டலமதில்குட்டரோகம் குணமானவெள்ளையொடுகறுப்புந்தீரும்,கள்ளவேசொறிசிரங்குமேகரோகந் தடிப்புடலேசெவ்வட்டைக்கடிரணங்கள்விள்ளவேபத்தியந்தானிதற்கோவில்ணவிதமானநெய்பாலுந்தயிர்மோருண்ணுஅள்ளவேபோகருடகடாட்சத்தாலே அடவாகப்புலிப்பாணி அருளினேனே ... ... (௩௦௦

வேதுநீர்.

அருளாலேயின்னமொன்றுசொல்லக்கேளு அடவாகஆலரசுஇச்சிப்பட்டை,பொருளாலேவகைவகைக்கு பலந்தான்பத்து புகழ்திடித்துப்பாண்டத்தில்போட்டுபின்பு, திருளாலேமூன்றுடனே சலத்தைவிட்டுத் திலமாகக்கார்ச்சியதைமேலேவாரு,இருளாலேயீராறுநாள்தான்வாரு இதமாகஅந்திசந்திமருந்தையுண்ணே...... (உஎக)

உண்ணப்பாசிவகரந்தைவிஷ்ணுகாந்தி உத்தமனே அரைத்துமுள்ளிக்காயின்வீதம்,பண்ணப்பாகொள்மூல முளைகளெல்லாம் பதரியேயுதிர்ந்துவிடுங்கண்டுபோரு, நண்ணப்பாபத்தியங் களிதற்கோயில்லைநாயகனேயீராறுநாளுக்கொள்ளே, திண்ணப்பா தீர்ந்துவிடுங்கண்டுபா ருதிறமானபோகருடகடாட்சந்தானே...... (உஎஉ)

பயித்தியந்தீர.

தானென்றசிறுகீரைவேரைத்தானுந் தானரைத்துஎளுமிச்சங்காய்தன்வீதம்,வானென்றமூன்றுநாளாறுவேளை வளமாக வெந்நிரில்கொடுத்துப்பாரு,கோனென்றஆறுநாளுப்பாகாது கொற்றவனேயேழுநாளெல்லாமாகும்; ஊனென்றபயித்தியந்தான் தீர்ந்துபோகும்,உத்தமனேபோகருடகடாட்சந்தானே... ... ...(உஎ௩

தானப்பாஇப்பாகம்தீர்க்கடப்புவேரை தான்கொடுப் பாய்பயித்தியந்தான்தீரும்பாரு,வானப்பாகவுதும்பைமிளகுபூண்டு வளமாகநசியமிடுஆறுவேளை, சீனப்பாமயக்கமுதல்கிறுகிறுப்பு கிறப்பானஅருநினைவுந்தீர்ந்துபோகும், ஆனப்பா போகருட கடாட்சத்தாலே அடவாகப்புலிப்பாணிபாடினேனே.............. (உஎ௪)

சகுனம்.

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு பண்பில்லாதலைவிரித்தல்மொட்டையப்பா,நாடினேன்சன்லூசிசெட்டிதட்டான் நலமானகுசவன் மூககரையன்செக்கன், கூடினேன்றாவிதனும் பிணிநோயாளன் குணமில்லாக்கட்டையொடுவிறகுயாக்கை, கூடினேன்கயிறு*சக்கிரியுமாகா சுணைகெட்ட*வழிக்குண்டியாகா தென்றே()

சக்கிரி-எணணெய்வாணியன்-

*வழிக்குணடி-கட்டுச்சோறு

ஆகாதுபுகையோடுபின்புதும்மல் அப்பனே அழுகையொடுமூசலுமாகா,வாகாதுநீர்ப்பானையுடைத்தபோது வழியிலேஅடித்துவிழக்காணப்போகா,பாகாதுமரம்வெட்டல்அடி யுஞ்சணடைபண்பானகட்டிலொடுநாற்காலிமுக்காலி, சோகாது இவைமூன்று மலர்ந்துகண்டரல் சுருக்கப்பாமரணமென்றுசொல்லிப்போடே(உஎ௫)

போடேநீதேவதைகள் ராஜாயானை பொலிவான பூஷணமாம் பெண்கள்பிள்ளை, நாடேநீ பூரணமாங்கும்பத்தோடு நலமானதயி ரோடுபாலுப்பானை- கூடேநீ குதிரையொடுவேதியர்க்கூட்டஞ்சுகமா னகுடைசுருட்டிசிவிகைக்களூ- ஆடேநி வெண்சாமரைசுகந்தபுஷ் பம்அப்ப னேவாத்தியங்கள்கேட்கநன்றே ... .. (௨௭௭)

சூரங்களுக்குக்கியாழம்

நன்றாகஇன்னமொன்றுசொல்லக்கேளு நலமானதூதுவளைக ண்டங்கத்திரி - பன்றாகநிலவேம்புமுத்தக்காசு பாங்கானஆடாதோ டைவிஷ்ணுகாந்தி, குன்றாதபடகஞ்சீந்தித்தண்டுக்குணமானசிற்றா முட்டிவேரினோடு -அன்றாதசெந்தொட்டிமூலமப்பா அடவானவே ம்புடையப்பட்டைதானே ... ... (௨௭௮)

பட்டையப்பா * மூசுக்கைமாதளையின்வேரும் பாங்கானது ம்பைப்பேய்ப்புடலுங்கூட்டி -திட்டையமாய்நாய்த்துளசிவேருமை யா நிசமாகவகைவகைக்குவிராகன்பத்து - தட்டையாம்உரல்தனி லேயிடிக்கும்போதுதனியாகச்சரக்குவகைசொல்லக்கேளு-நட்டமா ந்தேக்குதாளிசமாம்பத்திரி நலமானகுக்குடஞ்சிற்றரத்தையாமே()

* மூசுக்கை-முசுமுசுக்கை-

ஆமேதான்தேசவரந்திப்பிலியப்பா அடவாகவகைவகைக்குவி ராகன்மூன்று-தாமேதானிவையெல்லாமிடித்துத்தோண்டி தயவாக ஆறுபங்குவைத்துபபின்னே - வாமேதான்பாண்டத்திலெடுத்துப் போட்டுவளமாகரண்டுபடிசலத்தைவிட்டு - போமேதான்எட்டொ ன்றாய்க்குறுக்கியப்பா பொங்கமுடன்மூன்றுநாள்கொடுத்திடாயே

கொடுத்திடுதிமூன்றுநாளாறுவேளை குணமாகும்புளிபுகையு மோருந்தள்ளு-அடுத்திடவேகொடுத்திடுவாயிந்தப்பாகம்அப்பனேசுர மென்றதெல்லாந்தீரும் - கடுத்திடுநீயிதுமிஞ்சிசுரமேவந்தால் கற் கமொன்றுசொல்லுகிறேன்கனிந்துகேளு -வடுத்திடுந்திப்பிலிசுக்கு ச்சிற்றரத்தைவளமானதேசவரங்கோஷ்டமாமே........... (௨௮௧)

ஆமேதான்தேக்குஅதிமதுரங்கிராம்பு அப்பனேகருஞ்சீரம் வாய்விளங்கம் - போமேதான்தாளிசபத்திரியுமாஞ்சல் பொங்கமு டன்பிளகுடனேஅக்கிராகாரம் -தாமேதான் * விடையமதி * மதுரங் கூட்டிதயவாகவகைவகைக்குவிராகன்வாங்கி-வாமேதான்பொன்னிற மாய்வறுத்துக்கொண்டுவளமாகபொடியண்ணிவறுத்துக்கொள்ளே

* விடையம்-அதிவிடையம்-

* மதூரம்-அதிமதூரம்-

கொள்ளேநீயிஞ்சியைத்தான்சுரசஞ்செய்து குணமாகவெருக
டிதான்பொடியைப்போடு - அள்ளேநிமூன்றுநாளாறுவேளை அப்
பனேகொடுத்தவுடல்தீரும்பாரு- தள்ளேநீயிருமிஞ்சியதிகமானால்
தயவானதோஷிசன்னிஅடுத்துதானால்-சள்ளேநிசின்னியுடன்மாவிலி
ங்கஞ்சுகமானநொச்சியுடன்முருங்கையாமே ....(உஅரு)

ஆமேநிஆவியுடன்சங்கம்வேரும் அப்பனேயிந்தவகைப்பட்
டையெல்லாம்-தாமேநீயிஞ்சியுடன்சிற்றரத்தை தயவாகஇவையெல்
லாஞ்சுரசம்வாங்கி-வாமேநீ*பூநாகம்பொடிவறுத்து'வகையாகவிரா
கனெடைபொடியும்போட்டு-போமேநிவெருகடி மூன்பொடியில்
போட்டுபொலிவானதேனொருகாசெடைதான்வாரே ......(உஅசு)

*பூநாகம்-நாக்குப்பூச்சி-

வாரேதான்முலைப்பாலு*முள்ளிப்பாலும் வளமாக*முசுறு
முட்டைப்பாலுஞ்சேரு- கூரேதான்வெள்ளுள்ளிதயிலங்கொஞ்சம்
குணமானபாலுடையபீண்டுகொஞ்சம் - நேரேதான்கோழியுடமு
ட்டைகொஞ்சம் நிச்சயமாய்க்கஸ்தூரிரோகிணையுங்கூட்டி-சாரேதா
ன்கொடுத்திடுவாயாறுவேளைசாந்தமாய்ப்போகுமடாகண்டுபாரே()

*உள்ளி-வெள்ளைப்பூண்டு-

*முசுறுமுட்டை-ஒருவித எறும்பின்முட்டை-

பாரேநிவலிப்புடையசன்னிதோஷம் பறக்குமடா இச்சுரசங்க
ண்டபோதே-சேரேநிவிதியிருந்தாலபிக்கும்பாருதிறமாக*சாத்திய
மசாத்தியமுங்காணும் - வீரேநிசாத்தியந்தானிருந்தால்செய்நீ வீத
மாயசாத்தியமென்றால்செய்யொண்ணாது -கூரேநிபோகருடகடாட் சத்
தாலேகொற்றவனேபுலிப்பாணிபாடினேனே............ (உஅஸ)

*சாத்தியம்-சவுக்கியம்-

*அசாத்தியம்-நிலையின்மை-

தளம்கண்டாவிழ்தம்,

பாடினேன்தளமொன்று சொல்லக்கேளு பாங்காகப்பொன்
வெள்ளிபவழஞ்சிங்கி - நாடினேனுமையென்ற வோடுமப்பா நலமா
னவில்வோடுவிளாவினோடு - கூடினேன்கிராம்பு அதிமதுரஞ்சுக்கு
குணமாகதேசாவரந்திப்பிலியரத்தை - 'ஆடினேன் உருத்திராட்சமி
வையெல்லாந்தான்அடவாகமூலைப்பாலிலுரைத்திடாயே...(உஅள)

உரைத்தெடுத்து* மயிற்பீலிசுட்டச்சாம்பல் உடன்சத்திநாவு
தனில்தளமாய்ப்போடு - கரைத்தெடுத்துநாவதனில்சலந்தானூறுங்
கனிவில்லாதோஷ மதுதணியுப்பாரு, மரைத்தெடுத்தபேய்துமட்டி
வேரைத்தட்டி மைந்தனேகொடுத்துவிடுஅடக்கிக்கொள்ள-துரைத்
தெடுத்ததேகத்திலைந்ததோஷந் துன்பமதுதான்விலங்கும்கண்டு
பாரே ... ... (எஅஅ)

*மயிற்பீலி-மயிலிறகு-

தாகத்துக்குக்கியாழம்.

பாரேதான்விளாவிலைபுமாடாதோடை பாங்கானஆரசினுடக்கொழுந்துமப்பா-சேரேதான்வகைவகைக்குப்பிடிதானென்று சிறப்பானமணலும்அரைபடிதான்பேட்டு-கூரேதான்முந்திரிக்காய்மதுரந்தானும் குணமாகவகைவகைக்குவிராகனென்று - வீரேதான் இவையெல்லாங்கருகுமட்டும்விதமாகத்தான்வறுத்துதண்ணீர்வாரே

வார்த்தப்பாதானெரித்துக்குறுகக்காய்ச்சி வடிகட்டிதான்கொடுப்பாய்தாகந்தீருங்-கோர்த்தப்பாயிரந்தவிதமூன்றுநாளுங் கொடுத்திடவேதாகமென்றதெல்லாந்தீரும்- பார்த்தப்பாசுரதாகமூஷ்ணதாகம்பரிவானஅந்திரதாகம்பாவைதாகம் -போர்த்தப்பாகுடிநீரைகுடித்தபோது பொங்கமுடன்தீருமடாதிண்ணந்தானே... (உகம)

வாய்வுகளுக்கு

திண்ணமாய்ச்சங்கம்வேர்மூக்கொழுஞ்சி திறமானகொடிவேலிபரங்கிப்பட்டை - வண்ணமாய்ச்சுக்குடனேவாய்விளங்கம் வளமானசிறுதேக்குகொத்தமல்லி-எண்ணமாய்வகைவகைக்குவிராகனிரண்டு இடித்தெடுத்துபாண்டத்திலிதமாய்ப்போட்டு - நண்ணமாய்ச்சலமதுதான்படிதான்விட்டு நாயகனேயெட்டொன்றாய்க்குறுக்கிவாங்கே ... ... (உகூக)

வாங்கியேமிளகதுவும்விராகனென்று வளமாகப்பொடிபண்ணிபிதனிற்போட்டு- தாங்கியேவிளக்கெண்ணெய்துட்டெடைதான் விட்டுதான்கொடுப்பாய்மூன்றுநாளாறுவேளை - யேங்கியேடுளிபுகையுந்தன்னுதன்னுஇதமானவாயுடனேமேகவாயு -வோங்கியேமேல்கடுப்பு புளித்தஏப்பம் ஓடிவிடும் வாயுவெல்லாந் தீருந்தானே ... ... (உகூஉ)

சூட்டுக்குகுடிநீர்,

தீருமேயின்னமொன்றுசொல்லக்கேளு திமரனஇளநீருபடிதான்மூன்று-ஆருமேயெலுமிச்சம்பழச்சாற்நாழி அப்பனேசுன்னநீர்த்தெளிவுதானும்-ஏருமேபடியரைதானளந்துவாரு இசைவானகுமரிச்சாற்பலந்தானுறு - வீருமேசீரகமும்பலந்தானென்று விதமானஏலமரைப்பலந்தான்போடே..................... ....(உகூரு)

போடேநீஏலமதைப்பொடித்துப்போடு பொங்கமுடன்புதுச்சட்டிதன்னிற்சேர்த்து - நாடேநீமணலிட்டெரிசெய்து நாயகனேயிதுமேலேசட்டிவைத்து-கூடேநீயிச்சீலையதனால்மூடி குணமாகவைத்திருநீயகற்காலந்தான் - சாடேநீராக்காலம்பனியில்வைத்து சார்வாகமண்டலமுங்கால்தான்கொள்ளே .. (உகூச)

கொள்ளவேகால்படிதானந்திசந்தி குணமானக்குமரிச்சாற்பலமுங்காலு-உள்ளேநீகொண்டுவாஇந்தபாகம் உத்தமனேநீரெரிவுர

த்தம்வெள்ளை - தள்ளேநீபுள்ளெரிவுக்கடுப்புந்தீரும் தயவில்லாகா ங்கையதுதணியும்பாரு-அள்ளேநீபோகருடகடாட்சத்தாலே அடவா கப்புலிப்பாணிபாடினேனே ... ...(உகூரு)

வண்டுகடிதடிப்புக்குசவ்விரககளிம்பு

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு பண்பானவீரம துவிராகனென்று- ஆடினேன்வெண்ணெயிலேபோட்டரைத்து அ டவாகமேல்பூசவகைகையைக்கேளு -கூடினேன்மேல்தனிலே மேகத்தா லேகொற்றவனே சொரிசொரியாய்ப்புள்ளிக்காணும் - நாடினேன தையும்வண்டுகடிதானென்றுநாட்டிலேசொல்வார்களறிந்துபாரே()

பூரக்களிம்பு

யாரேநீபுள்ளியின்மேல்மூன்றுநாள்தான் பண்பாகத்தான்பூ சரணமதாகும் - சேரேநீரசமென்றபூரமப்பா செயலாகவிராகனெ டைவாங்கிவந்து - தீரேநீபசுவெண்ணெய்விராகனேந்தில் திறமாகத் தான்போட்டுஅரைத்துமைபோல்- வீரேநீபூசிடவும்ரணங்களாறும் விதமானபோகருடகடாட்சந்தானே ... (உகூஎ)

உஷ்ணகாங்கைக்குகுடிநீர்

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு தயவானஅறுகம் வேர்நெருஞ்சில்வேரும் - மானேதான்முருங்கையுட ஈர்க்குமப்பா மைந்தனேவகைவகைக்குப்பிடிதானென்று - வானேதான்பொடிப் பொடியாய்நறுக்கிப்பொன்போல் வறுக்கையிலேசீரகமிளகும்போ ட்டுஆனேதான்கசகசா விராகன்ரண்டு அப்பனேதான்போட்டுச்சல த்தைவாரே... ... ...(உகூஅ)

வாரேநீபடிசலந்தானெட்டொன்றாக்கி வளமாகப்பசு வெண் ணெய்க்கழஞ்சிப்போட்டு-சேரேநீகொடுத்தவுடன்* ஊஷ்ணகாந்த ல் சேர்ந்துவந்தவயிற்றுவலிகடுப்புந்தீரும் - கூரேநீயிந்தவிதமூன் றுநாள்தான் கொடுத்திடவே ஊஷ்ணத்தால்காங்கைதீரும் - தீரேநீ போகருடகடாட்சத்தாலே திறமாகபுலிப்பாணி 'சொன்னேன் தா னே .... (உகூகூ)

*ஊஷ்ணம்-காந்தலுக்கு.

குடைச்சலுக்குத்தயிலம்,

தானையாமயிற்பீலிபலந்தான்ரண்டுதான்போட்டுச்சட்டியிலே கருக்கிகொண்டு-வானையாமனோசிலைதான்விராகன்பத்து வளமாகத் தான்போட்டுஉருகும்போது-சேனையா வேப்பெண்ணெய்ப் படி தான்விட்டு செயலாகத்தானெரித்துஎடுத்துக்கொண்டு - மானையாபூ சியல்லோபிடிக்கும்போது மைந்தனேகுடைச்சல்முதல் குத்துப் போமே.. .... (ருா)

போமேநியிலைக்கள்ளிக்கொண்டுவந்து பொடிபொடியாய்க்கண்
டமதாய்நறுக்கிப்போட்டு, நாமேநிசலமதுதான்பதக்குவிட்டு நலமா
களட்டொன்றாய்க்குறுக்கிக்கொண்டு,தாமேநிமறுசட்டிநிதனிலிறுத்
துதயவாகவெள்ளாட்டுஅமுரிதானும்,வாமேநிபடிரண்டுகூட விட்டு
வளமாகப்பாகுபோல்காச்சிடாயே ... ...(ருாக)

காய்ச்சியேமேலெங்கும் பூசச்சொல்லிக் கனிவாகஆட்டுத்தோ
ல்*கலைத்தோல்தன்னில்,ஆச்சிம்யபடுத்திருக்கச்சொல்வாய்நீயும் அ
ப்பனேசாயரட்சைதன்னிற்கேளு, வாச்சியேநொச்சியிலைமுடக்கற்
றானும்வளமாகத்தழுதாழைமாவிலிங்கம், தாச்சியே மேனியுடன் து
ம்பைகொண்டு தயவானபூவரசம்பட்டையாமே ... (ருாஉ)

*கலைத்தோல்-ஆண்மான்தோல்

ஆமேநிவெட்டிப்பாவட்டைவாகை அடவானஎருக்கம் பூகடம்
பின்பட்டை, தாமேகாட்டெலுமிச்சைஇலையினோடு தயவாகஉத்தா
மணித்திருகுகள்ளி,வாமேதான் இலுப்பையுடப்பட்டைதானும்வள
மானநெல்லுமியுமிவைகளெல்லாம்போமேதாக்சலப்விட்டேகவை
த்துப் பொங்கமுடன்மூன்றுநாள்போதவாரே ... (ருாரு)

வாரேதான் அந்திசந்திவார்த்தபோது வளமில்லாச்சூலையொடுபி
டிப்புத்தானும், மீரேதான்கால்குடைச்சல் கைகுடைச்சல் மிகுந்த
தொருமேல்கடுப்புக்குத் துத்தீரும், யாரேதான் சருவாங்கவாதம்
போகும் பண்பானபுடைசூலைகாணைபாதர், தீரேதான்போகருடக
டாட்சத்தாலே திறமாகப்புலிப்பாணிசொன்னதாமே... (ருாச)

மாந்ததோஷத்துக்குகுளிகை,

தாமப்பா இன்னமொன்று சொல்லக்கேளுதயவானவில்வமப்
பாவிளாவும்வேளை,'மாமப்பாநாய்வேளைகஞ்சாங்கோரைமைந்தனே
சின்னியொடு காட்டுமொச்சை, தேமப்பாதிருநீற்றுப் பச்சைதும்
பைதெளிவானசிறுதும்பைகண்டங்கத்திரி, வாமப்பாஅமுக்கராசங்
குத்தாங்கி வளமானநுணுவேலிப்பருத்தியாமே ... (ருாரு)

*தாங்கி-மலைதாங்கி

ஆமேதான்முடக்கற்றான் *வெண்காவேளை அடவானசாரணையு
முட்டைநாறி,'தாமேதான் *கொழுஞ்சிவேர்புண்ணுக்குப்பூடுதயவா
னபிரமியொடுசித்திரமூலம், வாமேதான்கொவ்வையுடன் மணித்த
க்காளிவகையானகையானுங் கீழ்க்காய்நெல்லி,போமேதால் இந்தவ
கைமூலமெல்லாம் பொங்கமுடன்வகைவகைக்குகழஞ்சித்தூக்கே()

*வெண்காவேளை-வெள்ளைகொள்காய்வேளை.

* முட்டைநாறி-எருமுட்டைபீநாறி.

*கொழுஞ்சி-கொள்காய்வேளை.

தூக்கப்பாவசம்புடனேஓமஞ்சக்குதுல்பமில்லாசதகுப்பைதி
ரிகடுகுகூட-வாக்கப்பாதேசவரமரத்தைகோஷ்டம்வளம் லசாதிச்சா
ய்வெள்ளைப்பூண்டு-ஆக்கப்பா திருகுசீரகமூர்காயம்அடர்கோரோச
னைகருஞ்சீரகமுமப்பா- தாக்கப்பாவகைவகைக்குக ழஞ்சியொன்று
தான் தூக்கிகல்வத்திலரைத்திடாயே ... ... (௱௭)

அரையப்பாஅப்பைச்சாற்நாய்வேளைச்சாறஅட வான அகத்திச்
சாறிண்டம்பா லும்-துரையப்பாசாமமதுமயனைப் போலே துருசாகர
ண்டுபங்கு ஆக்கியப்பா-விரையப்பா துவரைப்போ லுருட்டிப்போ
டுவிதமாகவொருபங்கில்விபரங்கேளு-இரையப்பாசுத்திசெய்தவாள
ந்தானும் இதம:கக்கடுகுரோகணியும்பாரே... ... (௱௮)

பாரப்பாவகைவகைக்கு கழஞ்சிதூக்கிப் பாங்காக மூன்மருந்
தையிதிலேசேர்த்து-வாரப்பா அகத்திச்சாற்நிலவாகைச்சாற்வளமாக
விட்டரைப்பாய் சாமமூன்று- வீரப்பா துவரைபோலுருட்டிச்சே
ர்த்து விதமாக நிழலிலுலர்த்தி யெடுத்துக்கொண்டு-நேரப்பாகுழந்
தைகள்தன்பிணிகட்கெல்லாம் நிச்சயமாய்த்தான் கொடுக்கத் தீரும்
பாரே ... ... (௱௯)

பாரேதான்அப்பைச்சாற் நாய்வேளைச்சாற்பண்பான துளசிச்
சாற்சிறுதும்பைச்சாற்-வீரேதான் எருமுட்டைநாறிச்சாறும் வித
மானகாட்டுமொச்சையிலைச்சாறப்பா-கூரேதான்வயிறுகட்டிப்பிணி
நோய்க்கண்டால் கொடுப்பா யேநேர்வாளஞ் சேத்ததப்பா-ர்தேரே
தான்வயிறெடுத் துபிணிநோய்க்கண்டால் செலுத்திடுவாய் குளிகை
இச்சாறெதிலுந்தீருந்தானே ... ... (௱௰)

தீருமேமாந்தத்தின்வகைகள்யாவுந் திறமானதோஷமொடுவெவி
ப்புக்காய்ச்சல்-ஆருமேஅக்கினியின்மாந்தமப்பா அல்பில்லாஅமே
கவிதநோயும்போகுங்-கூரு மேசிசுவருத்தந் தீர்ந்தோர்க்கெல்லாங்
குற்றமொன்றும்வருகாதுவறுமைநீங்கும்- வீருமேபோக ருடகடா
ட்சத்தாலே விதமாகப் புலிப்பாணிபாடினேனே... (௱௰௧)

தாளகபற்பம்

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு பாங்கான அரிதா
ரக்கட்டியப்பா-கூடிநீகடுக்காய்த்தோல்நிராலளட்டிக் குணமாகமே
ல்கவசம்வலுக்கச்செய்து- நாடினேன்குகையிலிட்டுசில்லுப்போட்டு
நலமாகமண்சீலவலுக்கச்செய்து- ஆடினேன் ரண்டெருவில்புடத்
தைப்போடு அடவாகப்பற்பத்தையெடுத்துக்கொள்ளே.. (௱௰௨)

கொள்ளேநிபொடிப்பண்ணிவைத்துக்கொண்டு குணமாகதே
னதிலேவிராகன்கால்தான்-அள்ளிநிகெடுத்தவுடன்சுரங்கள் யாவும்
அப்பனே அகன்றோடிப்போகும்பாருதள்ளேந்யிருமலொடுபண்
டுசோகைதயவில்லாவெலிக்கடியந்தீரும்பாரு, சுள்ளேநீபித்தமொ
டு*மருளுந்தீருஞ் சுகமானபோகருடகடாட்சந்தானே...(௫௱௰௩)

மருள்-மயக்கம்.

தானப்பாபுகையோடுபுளியுர்தள்ளு தயவானஏழுநாள்நிரை
வாரு-வானப்பாநீவிவேர்கியாழுங்கொள்ளு வளமாகமற்று நாளெல்
லாங்கூட்டு-கோனப்பாகுடிலங்களொன்றமில்லைகுணமாகுஞ்சயமு
தலாய்சுரங்கள்போகும்,தேனப்பா போகருடகடாட்சத்தாலே தெ
ளிவாகப்புலிப்பாணிசொன்னேன்பாரே ... (௫௱௰௪)

குன்மவாந்தியேப்பம்வாய்நீருக்குகியாழம்,

பாரேநீயேலமொடு*நெல்விமுள்ளிப்பாங்கானபசுபபறுமிள
குகூட-சேரேநீநெற்பொரியும்வில்வவேருஞ்சிறப்பாகவகைக்குவகை
சொல்லக்கேளு-தீரோநீரண்டரைதான்பலமதாக திறமாகத் தூளாக்
கிவைத்துக்கொண்டு - கூரேநீரண்டுபங்கு குணமாச்செய்து கொ
ற்றவனேயிளநீரும்நேரம்ரண்டே ... ... (௫௱௰௫)

*நெல்விமுள்ளி-நெல்விவற்றல்

ரண்டானஇளநிரின்சலத்திலப்பா அணுவளவு பிசகாமல் மை
போலாட்டி- கொண்டானபாண்டத்திலெட்டொன்றுக்கி கொடுப்
பாயேயீராறுவேளைதன்னில்- கண்டானகுன்மவகைவாந்தியேப்பங்க
ளிவில்லவாய்நீரும்பொருமல்தீரும்-பண்டான அன்னமது செரிக்
கும்பாருபாங்கானரோசியமும்வலுப்பும்போமே (௫௱௰௬)

போமப்பாபத்தியந்தான்சொல்லக்கேளு பொங்கமூட னுப்
பிட்டப்பருப்புமாகும்-ஆமப்பாபசுவின்மோர் வெந்நீராகும் அட
வானதூதுவளை பொன்னுங்காணி-தாமப்பாகொடுவிளங்காய் நெல்
விக்காயுந்,தயவானபசுவினெய்தேனுமாகும்- வாமப்பா ஏழுநாள்சு
லத்தைவாரு வளமாகவெட்டாநாள்புளியைச்சேரே ... (௫௱௰௭)

வயிற்றிரைச்சல்பேதிக்கு

சேரேநியின்னமொன்று சொல்லக்கேளு செயலானமிளகு ப
லமிரண்டுவாங்கி-நேரோநீவேலியுடப்பருத்திச்சாறு நிறையவிட்டூற
வைத்துவுலரப்போடு- கூரேநீவறுத்துமிகப் பொடியாய்ச் செய்து
கொற்றவனேவெருகடியாய்த்தேனிற்கொள்ள- வீரேநீ வயிற்றிரை
சல்பேதிநிற்கும் விதமானபொருமலுடன்வாயுபோமே(௫௱௰௮)

வயிற்றிளைச்சல்இரத்தகடுப்புக்கு,

மோமேநீயின்னமொன் றுசொல்லக்கேளு பொலிவாகநீர்ப்பூண்டுபலந்தான்ரண்டு, ஆமேநீயெழுத்தாணியிலையைத்தானும் அடவாகரண்டுபலமெடுத்துக்கொண்டு, தாமேநீநெய்தனிலேவதக்கிமைந்தாதயவானஏலமது விராகனொன்று, வாமேநீசீனிபலமொன்றுகூட்டிவகையாகத்தானளாத்து எடுத்துக்கொள்ளே .. (௯௱௰௯)

கொள்ளப்பா மூள்ளிக்காய் வீதமாக கொற்றவனேமூன்றுநாளாறுவேளை,தெள்ளப்பாவயிற்றுளைச் சல்கடுப்பு ரத்தந் தெளிவில்லாமூலத்திற்சூடிந்திரும், அள்ளப்பாபத்தியந்தா னிதற்கோயில்லை ஐயனேதயிர்பாலும்நெய்புங்கூட்டு,விள்ளப்பாபோகருடகடாட்சத்தாலேவிதமாகப்புலிப்பாணிபாடினேனே ... (௯௱௨௰)

மூளைமூலத்துக்குகட்டு

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளுபண்பானகோவையுடஇலையைத்தட்டி, நாடினேன்சம்மஞ்சோறுக்கிப்பின்னை நலமாகத்தானு நட்டிநீனாவாருகூடுகிறேனெட்டுநாள்கிடந்தசோறுகொற்றவனேமுன்னிலையு மெடையாய்ச்சேர்த்து, ஆடுறேனுறுநாள்கட்டும்போது அடியோடேமூளைமூலமகன்றபோமே ... (௯௨௧)

இராமபாணத்துக்குகுளிகை.

போமேநீயின்னமொன்று சொல்க்கேளு பொலிவானவெள்ளையுடன்காவிக்கல்லு. ஆமேநீ சரியெடையாய் நீறுக்கொண்டுஅப்பனேவெற்றிலையின் சாற்றாலாட்டி, தாமேநீ நாழிகை யேழளாயுமானால் தயவாகமிளகதுபோலுண்டைசெய்து, வாமேநீசுக்குடையக்கியாழந்தன்னில் வளமாகமூன் றுநாள்கொடுத்திடாயே... (௯௨௨)
*வெள்ளை-வெள்ளைபாஷாணம்

கொடுத்தவுடன்சுரங்களெல்லாமோடிப்போகுங்கொற்றவனேயேழாநாள்நீரைவாரு,அடுத்தவுடன்சிறு கீரைமிளகுநீலி அப்பனேகியாழம்வைத்துக்கொடுப்பாய்நீயுங், கடுத்தவுடனேழாநாள்புளியைக்கூட்டுகழிவில்லா*சுறவையது காணுதப்பா, தொடுத்தவுடன்சாக்குளிகைராமபாணந் துளபமணிமார்பருடசாருமாமே... (௯௨௩)
*சுறவை-வீக்கம்

கெந்தகரசாயனம்,

ஆமேதான்கெந்தகத்தின்ரசாயந்தன்னை அடவாகச் சொல்லுகிறேனன்றுய்க்கேளு, தாமேதான்திரிகடுகு கிராம்புமேலந் தனிலவாங்கப்பட்டையுடன் லவுங்கப்பத்திரி, வாமேதான் சாதிக்காய்தாளி

சுபத்திரி வளமானசிறுநாகப்பூவினோடு, போமேதான்விலாமிச்சன்
வேரும் ஓமம் பொனுஞ் சீரகங்குரோசாணியாமே ... (௩௨௪)

ஆமடாசிற்றரத்தைசித்திரமூலம் அடவானத்திப்பிலிதன்மூல
த்தோடு, நாமேநீபூலாங்கிழங்குயானைத்திப்பிலி நலமானசருஞ்சீரம்
கூகைநீரும், தாமேநீமுந்திரிக்கைசந்தனந்தக்கோலந் தயவானஅதி
மதுரம்மூத்தக்காசும், வாமடாசடாமஞ்சில்கொத்தமல்லி வளமான
பேரீச்சம்பழமுமாமே ... ... (௩௨௫)

ஆமேநீதிரிபாலைசாதிபத்திரி அடவானவெட்டிவேர்குங்குமப்
பூ,தாமேநீதிலைப்பனைவேர்அசுவகெந்தி தயவானநெரிஞ்சி முள்ளு
நீர்முள்ளிவித்து, வாமேநீபூனையென்றகாலிவித்து வளமாக வகைவ
கைக்குவிராகனுஞு,போமேநீநிறுத்தெடுத்துப்பொடியாய்ச் செய்
செய்து பொங்கமுடஞ்சுத்திகெந்திபலமும்நாலே... (௩௨௬)

நாலானபரங்கிப்பட்டைபாவில்சுத்திநாயகனேதுளுபலமிரு
பதாக, பாலானசர்க்கரைதானப்பாகேளு பாங்காகப்பலமதுதானி
ருபதாக,கோலானசீனிசர்க்கரைதானப்பா கொற்றவனேபலமதுதா
ன்பத்ததாகும்,மேலானநீர்மிட்டான்கிழங்குஞ்சாறு விதமாக படி
யாறுபாண்டத்திட்டு, சேலானபசுவினெய்ப்படிதானென்று சிறப்
பானதேன்படிதானென்றுகூட்டே ... ...(௩௨௭)

கூட்டப்பாபாகதுபோல் பதத்தைப்பார்த்துக்கொற்றவனே
இறக்கிவைத்துப்பொடியைப்போட்டு,பாட்டப்பாகிளரியதையெடு
த்துக்கொண்டு அப்பனே குயக்கலசந்தன்னில்வைத்து, நாட்டப்பா
நெற்புட மும்பத்துநாள்தான் நலமாகத்தான்வைத்து எடுத்துக்
கொண்டு, ஊட்டப்பாகளற்சிக்காய் வீதங்கொள்ளு உத்தமனேதீ
ரும்நோய்விபரங்கேளே ... ... (௩௨௮)

தீரும்வியாதிகள்;

கேளேநீவாதமது எண்பதுக்குஞ் செடிபானபித்தமது நாற்ப
துக்கும், சூளேநீகிறிச்சினக்களாறுக்குந்தான் சுகமில்லாக்கிரந்திப
தினெட்டுச்சூலை.நாளேநீகுன்மமொடுபாண்டுசோகை நயமில்லாசய
ரோகம்மேகமெல்லாம், வாடேநீஅக்கினியின்மந்தந்தீரும் வளமான
பரிதிகண்டஇருள்போல்போமே ... ... (௩௨௯)

போமடாபத்துநாள்கொண்டபின்பு பொலிவானபத்தியந்தா
